www.padippakam.com

# பெண்களின் சுவடுகளிலிருந்து சில அடிகள்



சாந்தி சச்சிதானந்தம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பாலந்திமம்

# பெண்களின் சுவடுகளிலிருந்து

## சில அடிகள்

★

சாந்தி சச்சிதானந்தம்

பெண் கல்வி நிலைய வெளியீடு இல. 28
37, கின்ரோஸ் வீதி,
கொழும்பு-4.
இலங்கை

படிப்பகம்

www.padippakam.com

முதற்பதிப்பு : ஆகஸ்ட் 1990

விலை : ரூபா 10/-

100/94

Publishers :

**Women's Education Center Publications - No. 28**
37, Kinross Avenue,
Colombo-4.
Sri Lanka.

Printed by :

**The Kumaran Press,**
201, Dam Street,
Colombo-12.

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

பெண் நிலைவாதம் என்னும் கருத்துநிலை முழுக்க முழுக்க மேற்கத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொழுது போக்கு அம்சம் எனக் கருதும் பலர் நம் மத்தியில் உள்ளனர். அது தான் உண்மையெனில், ''நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்'' உடைய பாரதி கண்ட புதுமைப் பெண் ஒரு வெள்ளை மாதுவாகவன்றோ இருந்திருக்க வேண்டும். கிழக்கோ, மேற்கோ, உலகிலுள்ள சகல பெண்களினதும் பிரச்சினைகளை யொட்டி ஒரு வரலாற்று ரீதியான கண்ணோட்டமும் விளக்கமும் இல்லாதிருப்பதே இப் பொல்லாப்புக் கருத்துக்கள் விரவுதன் முதற் காரணமாகும். இப்பெரிய குறையினை நிவர்த்தி செய்யும் நட வடிக்கைகளின் முதற்படியாக ''பெண்களின் சுவடுகளில்'' என்ற நூலை எழுதி வெளியிட்டேன். இந்நூல், பெண்களின் வரலாற் றினை உய்த்துணருமுகமாக வெளி வந்த பல ஆய்வுகள் தந்த முடி புகளின் தொகுப்பாகும். இது மேலும் பலரைச் சென்றடைய வேண் டும் என்ற ஆர்வத்தில் பெண்கள் கல்வி ஆராய்ச்சி நிலையத்தினர் இதனொரு பாகத்தினை மீள அச்சிட்டு வெளியிட முன் வந்துள்ள னர்.

பெண்கள் வரலாற்றில் திருமணங்களின் தோற்றம் ஒரு திருப்பு முனையாகும். மனித குலம் தாய்வழிச் சமூக மரபினின்று தந்தை யுடைமைக் குடும்ப மரபிற்கு பிரிவுற்றுச் சென்ற சரித்திர நிகழ்வை நோக்கி அடியெடுத்து வைத்த முதற் சட்டமிது. ''பெண் களின் சுவடுகளில்'' இக்கட்டத்தினைச் சுருக்கமாக விவரிக்கும் பகு தியினையே பெண்கள் கல்வி ஆராய்ச்சி நிலையத்தினர் தேர்ந்து இங்கு தருகின்றனர். திருமணங்களின் தோற்றமும் தனியுடை மையும் ஒரே காலப் போக்கில் நடந்தனவென்றும் ஒன்றையொன்று ஊக்குவித்தனவென்றும் நான் வாதிடுகின்றேன் அதே போன்றே, ஆணாதிக்கச் சமுதாயமும் வர்க்க முரண்பாடுகளடங்கிய ஒடுக்கு முறைச் சமூக அமைப்பும் ஒரே காலப் போக்கில் நடந்தனவென் றும் ஒன்றையொன்று ஊக்குவித்தன என்பதும் எனது முடிபாகும். இத்தோற்றப்பாடுகள் இற்றைக்கு 8000 வருடங்களுக்கு முன்பு தொடங்கி அடுத்த 5000 வருடங்கள் வரை நீடித்தவையாகையால் இவற்றைப் பற்றிய பல ஐயப்பாடுகள் தீராமல் தொடர்வது இயற் கையே. ஆயினும் சமகால உலகினை, குறிப்பாகப் பெண்களின் பிரச் சினைகளைப் புரிந்து கொள்ள இந்நூலில் கையாளப்பட்ட கருத்துக் கள் ஒரு தளத்தினை ஏற்படுத்திக் கொடுப்பின் என்னுடைய நோக் கம் நிறைவேறுகின்றது என்றே கூறவேண்டும்.

புதிய புதிய விவாதங்கள் மலர வேண்டும், அவை எம்மைப் புதிய ஆய்வுகளுக்கு இட்டுச் செல்ல வேண்டும். இதன் பயனாகப் பெற்ற அறிவு பெண்கள் இயக்கங்களை வழி நடத்தும் புதிய யுக்தி களைத் தோற்றுவிக்க வேண்டும்.

— சாந்தி சச்சிதானந்தம்

www.padippakam.com

# பெண்களின் சுவடுகளிலிருந்து சில அடிகள்

"பெண்களின் சுவடுகளில்'' வெளிவந்து, சில நாட்களாகிவிட்டன. அதைப் பற்றிய ஒரு மதிப்புரையும் வெளி வந்து விட்டது. ஆனாலும், அதன் தாக்கம் பெண்கள் மத்தியிலும் பரவலாக ஏற்பட்டதற்குச் சான்றுகள் இல்லை. ஒன்று, தற்போதைய அரசியல் நெருக்கடி காரணமாயிருக்கலாம். அல்லது சிதறிக் கிடக்கும் தமிழ்ப் பெண்களினால் ஒன்று கூடி, அதை விமர்சிக்கவோ, கலந்துரையாடவோ சந்தர்ப்பங்கள் இல்லாமலிருக்கலாம். இதனாலேயே அதன் ஒரு சிறு பகுதியை - மிகமுக்கியமான பகுதியை ஆணாதிக்கம் தலை எடுத்த காலப் பகுதியைப் பிரித்து, மறு பிரசுரம் செய்ய நாம் முன் வந்துள்ளோம். இது மட்டுமல்ல. சாந்தியின் கருத்துக்கள் ஒட்டு மொத்தமாக ஏற்கக் கூடியன அல்ல. பெண்கள் மத்தியிலும் ஏன் எல்லாப் புத்தி ஜீவிகளிடத்தும் ஒரு கருத்து மோதலை இதனால் உண்டாக்கலாம் என்பதும் எமது எண்ணம். பெண்கள் கல்வி ஆராய்ச்சி நிலையம் டிசம்பர் மாதத்தில் நடத்த இருக்கும், ஒரு பட்டி மன்றத்தில் இப்படிப்பட்ட ஒரு சில பிரசுரங்களை பெண்களுக்கு விநியோகித்து. ஒரு கருத்துப் பரிமாறல் செய்யலாம், என்பது எமது பேரவா. தற்போதைய 'யுத்த' நிலை மாறி, சமாதானம் ஓரளவாவது நிலவ வேண்டும் என்பது எமது பெருங் கவலை.

இதை மறு பிரசுரம் செய்ய சம்மதித்த சாந்திக்கு எமது நன்றி.

**செல்வி திருச்சந்திரன்**
**பெண்கள் கல்வி நிலையம்.**

**37, கின்ரொஸ் வீதி,**
**கொழும்பு - 4.**
**23-7-90**

www.padippakam.com

# பெண்களின் சுவடுகளிலிருந்து சில அடிகள்

## கலவி மாற்று முறை

மனிதர்களின் முதல் சமூக அமைப்பினைத் தாங்கும் அத்தி
வாரங்களாக தன்னின உண்ணி முறைக்கும் தகாப் புணர்ச்சிக்கும்
எதிரான தடைகள் இருந்தன.

இந்த முறையின்படி ஒரு குழுவினர் எந்த மனிதர்களைத்
தமது உணவாக எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனரோ
அவர்கள் மத்தியிலேயே உடலுறவு கொள்வதற்கான தமது துணை
களையும் தேடி எடுக்கவேண்டியதாயிற்று. இதனால் தானோ என்
னவோ ஆதிவாசிகளின் மொழி வழக்கில் உண்பதற்கும் உடலுறவு
கொள்வதற்கும் ஒரே பதம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது போலும்!
தர்க்கரீதியாகப் பார்த்தாலும் இதனைத் தவறு என்றே சொல்வதற்
கில்லை. வாழ்க்கையின் இந்த இரு அத்தியாவசியமான செயற்பாடு
களை உடலில் எழும் இருவகைப் 'பசி'கள் என்றும் விவரிக்கலா
மல்லவா? தன்னின உண்ணி முறைகள் அற்றுப்போய் ஆயிரக்கணக்
கான ஆண்டுகள் சென்ற பிறகுதான் இப் பதப்பிரயோகங்களும்
மெதுவாக மாறத் தொடங்கின.

பதினான்காம் நூற்றாண்டில் பிரேசிலில் வாழ்ந்த ஆதிவாசிகள்
மத்தியில் பயணம் செய்தவர்கள் விட்டுச் சென்ற குறிப்புகளின்
மூலமே தன்னின உண்ணி முறை பரவலாக இடம்பெற்றிருந்த ஒரு
காலத்தில் ஆதிவாசிகளின் காதல் வாழ்வு எவ்வாறு இருந்தது என்
பது பற்றிய சில தகவல்கள் நமக்குத் தெரியவந்துள்ளன. டுபினாம்பா
மக்களுடைய சடங்கு முறைகளைப் பற்றியும் இந்தப் பயணிகள்
விபரமான குறிப்புகளைத் தந்திருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தப் பயணிகள் ஆதிவாசிகள் மத்தியில் தங்கியிருந்த காலத்தில் தான் அந்த ஆதிவாசிகளின் இரு குழாம்களுக்கு இடையில் போர் நிகழ்ந்திருக்கிறது.

இது பழி தீர்த்துக் கொள்ளும் போர்; தலைக்குத் தலை வாங்கும் பொருட்டு நடக்கும் போர். இந்தப் போர் வழக்கமான பாணியில் நடுவர்கள் மத்தியஸ்துவம் வகிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு போர் வீரனும் போகும்போதே கைதிகளை இழுத்து வருவதற்காகநீண்ட கயிறுகளைத் தன் உடல் முழுவதும் சுற்றி எடுத்துக்கொண்டு போகிறான். போர் ஆரம்பித்தது. முதலில் தூரத்தூர நின்று சண்டையிட்டவர்கள் சிறிது நேரம் கழித்து நெருங்கி வந்து ஒருவரை ஒருவர் நிராயுதபாணிகளாக்க முயன்றனர். இந்தச் சண்டையில் எவன் முதலில் மற்றவனைத் தொடுகின்றானோ அவன் தொடப்பட்டவனைத் தனது கைதியாகக் கொள்ள முடியும் என்பதே அவர்கள் விதி.

இந்த ரகளையில் சிலர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களினதும் கைதியாக்கப்பட்டவர்களினதும் எண்ணிக்கையானது இரண்டு பகுதியினருக்கும் ஏற்றவாறு சமப்படுத்தப்பட்டவுடன் போர் முடிந்தது.

அதன்பின் போர்க் களத்திலேயே எல்லாருமாக இறந்தவர்களின் உடலைச் சுட்டு உணவாக உண்டனர். எஞ்சிய இறைச்சியைத் தத்தமது ஊர்களுக்கு எடுத்துச் செல்லத் தயாராய் கட்டி எடுத்தனர். திரும்ப ஊருக்குச் செல்ல ஆயத்தமானவுடன் தமது கைதிகளை ''நான் பிணைக்கும் விலங்கு நீதான்'' என்று கூறியபடி தமது கயிறுகளினால் கட்டி அவர்களையும் கூட்டிச் சென்றனர்.

கிராமங்களுக்குள் காலடி எடுத்து வைப்பதற்கு முன்பு எல்லோருமே தனிமைப்படுத்தும் சடங்குகளுக்கூடாக விலக்கு நீக்கப் பெற்றனர். இந்த விரதம் ஒரு மாதம் வரை நீண்டது. இது முடிவுற்ற பின்னரே போரை ஒட்டிய விருந்துகளும் கொண்டாட்டங்களும் ஆரம்பமாகின.

முதன் முதலாகக் கிராமத்துக்குள் கைதிகள் நடந்து வரும்போது தாம் வழியில் சந்தித்த கிராமத்துப் பெண்களை நோக்கி ''உனது இறைச்சியாகிய நான் இதோ வருகிறேன்'' எனப் பலத்த குரலில் பிரகடனம் செய்யக் காணப்பட்டனர். பின் விருந்துகளிலும் களியாட்டங்களிலும் கூட அவர்கள் சம பங்கேற்றனர். இந்த விருந்துகளில் கைதிகளும் அவர்களைக் கைப்பற்றியவர்களும் மாறி மாறி உரை நிகழ்த்தினார்கள். ''உங்களை வெற்றிகொண்டு உணவாகக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்ள நாம் வீரமுள்ள ஆண்களாக வந்தோம்: நீங்கள் எமது எதிரிகள். உண்மையான வீரர்கள் தம் எதிரிகளின் பூமியிலேயே உயிரை விடுவர் ஆனால் எங்களுடைய சுற்றத்தவர் எங்களுக்காக உங்கள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வார்கள்'' எனக் கைதிகள் உரையாற்றினர். அதற்கு, ''உங்கள் இனத்தவர் எங்களில் பலரைக் கொன்று விட்டனர். அதற்கு நாம்தாம் வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டும்'' என கைப்பற்றியவர்கள் பதிலிறுத்தனர்.

இந்த நிகழ்ச்சிகளின் பின் கைதிகள் எல்லோரும் விடுவிக்கப்பட்டு கிராமம் முழுவதும் சுதந்திரமாக உலவ அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு விசேஷ விருந்தினர்களுக்குக் கொடுக்கப்படும் சகலவித கௌரவங்களும் அளிக்கப்பட்டன. ஆயினும் கைதிகள் தாம் தப்பித் துப் போக சிறிதும் முயலவில்லை. உரிய சடங்குகளுடன் எதிரி களால் உண்ணப்படுவதே இந் நிலையில் தமக்குக் கிடைக்கக்கூடிய மிகப் பெரிய கீர்த்தி என்று அவர்கள் நம்பினார்கள். அத்துடன் இவர்கள் தப்பியோடித் திரும்ப தம் மக்களிடையே சென்றிருந்தால் கூட, தமது கடமைப்பாடுகளினைத் தவறவிட்டதாகக் கருதி அம் மக் களே இவர்களைக் கொன்றிருப்பார்கள். இக் காரணங்களுக்காக மாதக் கணக்கிலும் சில சமயம் வருடக்கணக்கில் கூட எதிரிகளின் ஊர்களில் தங்கியிருப்பர்.

இக்காலம் முழுவதும், இவர்களுடைய கழுத்தைச் சுற்றிக் கட் டப்பட்ட கயிறொன்றுதான் கிராமத்தவரிடமிருந்து இவர்களை வேறு படுத்திக் காட்டிய ஒரே அடையாளமாகும்.

இவர்கள் இக் கிராமத்துப் பெண்கள் யாரையேனும் மண முடிக்க விரும்பினால் அது பெருமைக்குரிய விடயமாகக் கருதப்பட்டு பெரிய திருமண விழாவே நடத்தப்பட்டது. அதாவது எதிரிகளெனினும் கலவிக்கு இசைவான துணைகளானார்கள். அதன் காரணமாகவே வரும்பொழுது எல்லாப் பெண்களிடமும் தம்மை அவர்களின் இறைச்சி என அறிமுகம் செய்து கொண்டார்கள் போலும்.

இப்படியாகத் திருமணங்கள் நடைபெற்றாலும் அவை எந்த விதத்திலும் அக்கைதிகளுக்கு விதிக்கப்பட்ட முடிவை மாற்றவில்லை. கிராமத்தின் மூத்தோர்கள் குழு இவர்கள் கொல்லப்பட வேண்டிய நாளைக் குறித்து தம்முடன் சமாதானத்திலிருக்கும் குழாய்களுக்கெல் லாம் அழைப்பு விடுத்தது. ஏராளமான ஆயத்தங்களுடன் ஆரம் பித்த விழாவானது பல நாட்களுக்கு நீடித்தது. கடைசி நாளில் ஒரு குறித்த நேரத்தில் நெருப்பை மூட்டினார்கள். சடங்கில் உபயோகிக்



படிப்பகம்

www.padippakam.com

கப்படப் போகின்ற கதாயுதத்தினைக் கைதிக்கும் காட்டினார்கள். அவன் அதனைச் சிறிது நேரம் கையில் வைத்திருக்கவும் அனுமதிக் கப்பட்டான்.

இந்தக் கருவியைக் கொண்டுதான் அவனுடைய கபாலத்தைப் பிளந்தார்கள். அவன் இறந்த பின் அவனுடைய இறைச்சியினை விருந்தினர் உட்பட எல்லோரும் சுட்டுச் சாப்பிட்டனர். அந்த இறைச்சியின் சிறிய துண்டொன்று அவனை மண முடித்த பெண்ணுக்கு உண்ணக் கொடுக்கப்பட்டது. அச்சடங்கில் கலந்து கொண்ட ஒரேயொரு பெண் இவளாகவே இருந்தாள். பெரியதொரு விலங்கினைக் கொன்றாலும் கூட இதே விதமான சடங்கு முறைகளின் பிரகாரமே அதனையும் உண்டனர் என்பதையும் அறிகின்றோம்.

தன்னின உண்ணிமுறைகள் குறையத் தொடங்கவே ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உறவினை ஒழுங்குபடுத்துமுகமாக மரபுவழிக் கூட்டங்களும் அவற்றின் கலவி மாற்று முறையும் நடைமுறைக்கு வந்தன. இதன்படி ஒரு பகுதியினர் மற்றப்பகுதியினருக்கு உணவு மாற்றுமுறையின் கீழ் உணவும் கலவி மாற்று முறையின் கீழ் துணைகளும் கொடுத்து வாங்கிக் கொண்டார்கள். மார்கரெட்மீட் அரபேஷ் மக்கள் மத்தியில் வழங்கும் ஒரு பழமொழித் தொகுப்பைத் தருகின்றார்.

உன்னுடை தாய்,
உன் சொந்த சகோதரி,
உன் சொந்த பன்றிகள்,
நீ கூட்டிக் குவித்த உன் கிழங்குகள்
நீ உண்ண முடியாது.
மற்றவர்களுடைய தாய்மார்
மற்றவர்களுடைய சகோதரிகள்
மற்றவர்களுடைய பன்றிகள்
மற்றவர்கள் கூட்டிக் குவித்த அவர் கிழங்குகள்
நீ உண்ணலாம்.

இவை குழு உக்குறி முறைகளின் சகலத் தடைகளையும் சுருங்க விளக்கும் வசனங்களாகும். தன்னினம் உண்ணும் வழக்கம் முற்றாக அற்றுப்போன இம்மக்கள் மத்தியில் தாயையும், சகோதரியையும் உண்பதைப் பற்றிக் கூறப்படுகின்றதே யென நாம் கலக்கம் கொள்ளத் தேவையில்லை. உறவு கொள்வதையே இவர்கள் இப்படிக் குறிப்பிட்டனர். மாற்று முறையின் கீழ் துணை தேடுவதில் நிலவும் பயங்கரங்கள் பெருமளவு குறைக்கப்பட்டனவாயினும் முன்னைய சந்தேகங்களும் பயங்களும் தொடரவே செய்தன. தோபுக்குடிகளைப் பற்றி ஒரு ஆய்வாளர் கூறுகின்றார்.



படிப்பகம்

www.padippakam.com

''எதிரிகளும் சூனியக்காரரும் நிறைந்த கிராமத்தில் தான் ஒருவன் பெண் எடுக்க வேண்டியவனாகின்றான். அதுவும் இவர்களில் சிலர், தன் சொந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களைக் கொன்றவர்களாகவோ அல்லது அப்படிக் கொன்றவர்க்குப் பிறந்தவர்களாகவோ இருக்கக்கூடும் என்று கருதப்படுகின்றனர். அத்துடன், பின்னிரவிலோ சுற்றியுள்ள கிராமங்களில், இதுவரை இறந்த ஆண்களினதும் பெண்களினதும் ஆவிகள் கொலைப் பசியுடன் உலாவரும். ஆகவே தன் துணைவியுடன் கலந்துறவாடப் புறப்படுகின்றவனுக்கு இரு கிராமங்களுக்கிடையில் இருக்கும் பத்து கெஜ தூரமும் நூறு கெஜ தூரத்துக்கு சமானமாகும். மேலும் முன்னிரவிலேயே தமது காதல் விளையாட்டுக்களை முடித்துக்கொள்ள வேண்டியவர்களாகின்றனர். உண்மையில் இளைஞர்களெல்லாரும் மிகுந்த துணிவுடன் உயிரைக் கையில் பிடித்த வண்ணமே தமது கிராமத்து எல்லையைத் தாண்டி காதலைத் தேடிச் செல்கின்றனர்.''

இவ்விளைஞர்கள் தாம் துணையெடுக்கும் கிராமத்தில் ஏதேனும் இசகு பிசகாக நடந்து கொண்டாலும் மரணத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதனால் ஆண் பிள்ளைகள் ஒரு குறிப்பிட்ட வயது வந்தவுடன் நடத்தப்படும் ''தொடக்க'' ச் சடங்குகளில் தன்னினம் உண்ணும் வழக்கத்தின் தீமைகளும் தம் மனைவியரின் ஊரில் கொள்ள வேண்டிய நடத்தைகளும் முக்கியமாகப் புகட்டப்பட்டன. ஒரு ஆண் தன் மனைவியின் ஊரில் இருக்கும் போது கவனத்துடன் நடக்கவும், மெல்லப் பேசவும், மனைவியின் உறவினரின் கண்காணிப்புக்குப் பணியவும், மனைவியின் தாயைத் தவிர்க்கவும் இச்சடங்குகளின் மூலம் கற்றுக் கொள்கின்றான். இவற்றுள் மனைவியின் தாயைத் தவிர்த்தலே மிகக் கடுமையான விதியாகும்.

ஒரு இளைஞனுக்கு மாந்திரீக சூனியங்களை விடவும் பயப்படும் படியான ஒரு விடயம் உண்டெனில் அது அவன் மனைவியின் சமுகத்தில் உள்ள வயது முதிர்ந்த பெண்கள் கொண்டிருப்பதாகக் கருதப்படும் அமானுஷ்ய சக்தியே என்று கூறலாம். அதுவும் அவர்களில், மனைவியின் தாயையோ பாட்டியையோ பார்த்து விட்டானாயின் காணாத பூதத்தைக் கண்டு விட்டவன் போல் நடுநடுங்கி விடுவான். சில விடயங்களில் மனைவியின் தாய்மாமனையும் பார்க்காது தவிர்த்துக் கொள்வார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் பெண்களும் குழந்தைகளும் இருக்கும் இடமே மிகப் புனிதமான பகுதியாகக் கருதப்பட்டது. எந்த வேற்று மனிதனும் கிராமத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டாலும்



படிப்பகம்

இந்தக் குறிக்கப்பட்ட பகுதியை நெருங்கவும் அனுமதிக்கப்படமாட்டான். அதுதான் வேற்று பெண்களுக்கெதிராக இம்மாதிரியான விலக்கினை அனுஷ்டித்தவர்களோ என்னவோ? அத்தோடு, வயது முதிர்ந்த பெண்களின் மாந்திரீக சக்தி பற்றி பொதுவாகவே ஒரு அபிப்பிராயம் நிலவும் வேளையில் அவர்கள் வேற்றுக் கிராமத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்து விட்டால் ஏற்படும் அச்சத்திற்கு அளவில்லைதான்.

அவுஸ்திரேலியாவில் ஒருவனுடைய மாமியாரின் வரவைத் தெரிவிக்க பெரும் ஓசை கிளப்பும் வழக்கம் பொதுவாகப் பல இடங்களிலும் காணப்பட்டது. அங்கொரு மனிதன் தான் தூங்கிக் கொண்டிருக்கும் போதுமாமியாரின் நிழல் தன் கால்கள் மீது படர்ந்த ஒரு காரணத்தினால் பயத்தில் விறைத்து மூர்ச்சையாகி விட்டான். இங்கெல்லாம் முந்திய காலகட்டத்தில் மாமியாருடன் பேச விரும்புபவனுக்கு மரணதண்டனையே விதிகப்பட்டது.

காலப்போக்கில் இத்தண்டனை அத்தகைய நபரை ஊர்விட்டு ஊர் துரத்துவதாக மாறி அமைந்தது பசுபிக் பிராந்தியத்திலுள்ள பாங்க்ஸ் தீவுகளிலும் மாமியாரும் மருமகனும் நேருக்கு நேர் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வதில்லை.

வடஅமெரிக்க இந்தியர் மத்தியில் பெரும் ஆயுதங்களை தாங்கிய போர் வீரர்களும் தமது மாமியார் எதிரே வரக்கண்டால் வெலவெலத்துப் போய் புதர்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டனர். ஆபிரிக்காவிலுள்ள ஸுலூ குடியினர் மத்தியிலும் நிலை இதுவே. நாவாகோஸ் ( Navahos ) மக்கள் மத்தியில் மாமியாரைக் குறிக்கும் பதமான 'தொயிஷினி' என்பது ''நான் பார்க்கக் கூடாதவள்'' எனப் பொருள்பட அமைந்திருக்கிறது.

### மாமி மனைவி மருமகன்

மாமியார்களைக் குறித்தே தடைகளும் விலக்குகளும் கடுமையாக இருப்பினும் இன்னும் கூர்மையாக அவதானித்தால் இச்சமூகங்களில் இத்தகைய தடைகள் பெண்ணினுடைய மூத்த உறவினர்கள் எல்லாருக்கும் விரிவாக்கப்பட்டிருந்ததை அறிந்து கொள்ளலாம்.

சமாதான உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்ட பின்பும் வேற்று மனிதனைப் பற்றிய சந்தேகமே இவ்வாறு அவனைத் தூரவைத்தே பழகவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கிற்று எனலாம். இதனால் திருமணங்கள் என்பவை இருளில் காடுகளில் கணநேரம் கூடல்களை அனுபவிப்பதாகவே நீண்ட காலமாகத் தொடர்ந்து கொண்டிருந்தன.

இதற்குப் பின்னர் தோன்றிய வழக்கம் ''வந்து காணும் கணவர்'' முறை ஆகும். இதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் அறிமுகமில்லாத விருந்தினரும் வேற்று கிராமங்களிலிருந்து வரும் கணவர்களும் தங்குவதற்கென பொது விடுதிகள் ஸ்தாபிக்கப்பட்டன. அங்கு வந்து தங்கும் கணவன் தன் மனைவியின் ஆண் உறவினர்களின் நெருங்கிய கண்காணிப்பின் கீழ் உண்டு உறங்கி இருப்பான்.

அநேகமான ஆண் பெண் சந்திப்புகள் ஒரு இரவு மட்டும்தான் நீடிக்கும். விடிந்ததும் கணவன் தன் ஊருக்குப் போய்விடுவான். பீஜித் தீவுகளில் ஒவ்வொரு கிராமத்திலும் இரு விடுதிகளாவது இந்த உபயோகத்திற்கென கட்டப்பட்டிருந்தன. பீஜிக் கணவர் தம் மனைவியரின் வீட்டில் தங்கியதில்லை. மனைவியரின் கிராமத்தை அடைந்தவுடன் தம் ஆயுதங்களை ஒருபுறம் வைத்துவிட்டு அவள் உறவினர்கள் வந்து விடுதிக்கு அழைத்துச் செல்லும் வரை வெளியில் காத்திருப்பர்.

நாளடைவில் இந்த வந்து காணும் கணவர்கள் இரவில் இரகசியமாய் மனைவியின் அறைக்குள் நுழையும் அந்தஸ்தினைப் பெற்றுவிட்டனர். ஜப்பானிய மொழியில் திருமணத்திற்கு வழங்கப்படும் பதங்களிலொன்று 'இரவில் வீட்டுக்குள் நுழைதல்' எனும் பொருள்பட அமைந்திருக்கின்றது.

மத்திய ஆசியாவைச் சேர்ந்த குலக் குழுக்கள் மத்தியிலும் கணவர்கள் இரகசியமாகவே மனைவியின் வீட்டிற்குள் நுழைவார்கள். காலையில் அவளுடைய ஆண்உறவினர் பார்க்கா வண்ணம் கவனமாக வெளியேறுவர். ஆனால் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டாலோ கணவர்கள் நையப்புடைக்கப்பட்ட சம்பவங்கள் நிறையவே உண்டு.

காசிக், குடிகள், திக்பராக்கள், யாகூட்டுக்கள், குறில்குடிகள் ஆகியோர் மத்தியிலும் கணவர்கள் மனைவியின் வீட்டுக்கு இரவில்தான் வந்து போவார்கள்.

இந்தியாவில் கேரளா மாநிலத்தில் வந்து காணும் கணவர் முறை இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பரவலாகக் காணப்பட்டது. ஒரு ஆணும் பெண்ணும் கூடலுக்கு இரகசியமாய் இரவில் மட்டும் சந்திப்பதற்கு அதையொட்டிய கூச்சங்களே காரணம் என நாம் பொதுவாகக் கருதுகிறோம். ஆனால் இவ்வழக்கத்தின் ஆரம்பங்கள் வேற்று குழுவினரைப் பற்றி ஆணிற்கு ஏற்பட்ட பயத்தினாலேயே தோன்றின என்றே எண்ணத் தூண்டுகின்றது.

விடுதிக்கு வந்துபோன கணவன் பெண்ணின் அறைக்குள்ளேயே வரும் யோக்கியதை பெற்றது மாமியாரினால்தான். காலப்போக்கில்

www.padippakam.com

மாமியார்தான் தன் மகளுக்கும் இன்னொரு ஆணிற்கும் தூதுசென்று அவர்களிருவரும் கூடி மகிழ அந்த ஆடவனை இரகசியமாக பின் கதவினால் உள்ளேவிட்டாள். அத்துடன் தன் சமூகத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியப்படுத்துவதில்லை. மந்திரக்காரியாகவும் பயங்கரமானவளாகவும் தென்பட்ட மாமியார் வரலாற்றின் இந்தக்காலக்கட்டத்தில் தன் மருமகனின் உற்றதோழியாகி விட்டாள்.

மேற்கூறிய வழக்கங்களைத் தவிர, சற்று நீண்ட காலத்துக்குத் தொடரும் காதல் உறவை ஏற்படுத்தும் இன்னொரு வழக்கமும் உண்டு அது, மணமாகாத பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஸ்தாபிக்கப்பட்ட பிரம்மச்சாரிய விடுதிகள் மூலம் உறவுகளைத் தொடரும் வழக்கலாகும். மெலனீசியா டரோபிரியாண்ட் தீவுகள் போன்ற அநாகரிக காலகட்டத்திலிருந்த பல சமூகங்களில் இது காணப்பட்டது. ஒரு கிராமத்தின் வயது வந்த பெண்கள் அடிக்கடி இவ்விடுதிகளில் இரவுகளைக் கழிப்பர். இருளானதும் அயல் கிராமங்களிலுள்ள இளைஞர்கள் இங்கு வந்து தாம் துணை எடுக்கத் தயாராயருப்பதை குறிக்குமாறு வாசலில் குந்தயிருப்பர். பெண்களும் அதில் தமது மனத்துக்குப் பிடித்தமானவர்களைத் தேர்ந்தெடுத்து பொழுதை அவர்களுடன் அங்கேயே கழிப்பர். ஒரு ஜோடிகள் ஒருவரையொருவர் நன்கு பிடித்திருந்தால் அவர்கள் நீண்ட காலத்துக்கு இவ்வாறு அடிக்கடி சந்தித்துக் கொள்ளலாம் ஆனால் இருவருக்கும். பொதுவான தேவையாக உடலுறவு ஒன்றே காணப்பட்டது. அவர்களுக்கிடையே வேறெந்த கொடுக்கல் வாங்கல்களும் இருக்கவில்லை. ஒன்றாக உட்கார்ந்து உண்ணவும் மாட்டார்கள். ஒருவருக்கொருவர் ஏதும் பணிவிடை செய்து கொடுக்கவும் மாட்டார்கள்.

இதன்பின், பகிரங்கமாக மாமியார் தன் மருமகனை அங்கீகரித்து தனது மகளுடன் வீட்டில் தங்குவதற்கு அனுமதிக்கும் நிலை உருவானது தோபுக் குடியினரிடம் இது அவதானிக்கப்பட்டது. இரவில் இரகசியமாக ஒரு பெண்ணுடன் தங்கவரும் வாலிபன் வழக்கம் போல் விடிய முன்னம் எழுந்து ஓடிவிடமாட்டான். விடிய விடிய தூங்கிக் கொண்டிருப்பது போல் பாசாங்கு பண்ணுவான். இதுவே திருமணத்திற்கான அவன் விண்ணப்பம். தூக்கத்திலிருந்து எழுந்த மாமியார் இந்த விண்ணப்பத்தினை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக முன் வாசலை முழுவதும் மறைத்தபடி அமர்ந்து கொள்ளுவாள்.

இதனைப் பார்த்ததும் அண்டை, அயல் என ஊரெல்லாம் வாசலைச் சுற்றிக் குழுமி விடும். எல்லோரும் சம்பந்தபட்ட வாலிபன்



படிப்பகம்

www.padippakam.com

எவனென்று அறிவதிலேயே ஆர்வமாயிருப்பர். அளவான கூட்டம் சேர்ந்தவுடன் வாசலிலேயே ஒரு பாய் விரித்து தன் மகளையும் அவ்விளைஞனையும் அமர வைப்பாள். அடுத்த அரைமணி நேரத்திற்கு எல்லோரும் இமைகொட்டாமல் அவ்விருவரையும் பார்த்துக் கொண்டேயிருப்பர்.

இதுகாறும் இருட்டில் இரகசியமாகத் தொடர்ந்த உறவு உறவினர்களுக்கு இவ்வாறு பகிரங்கப் படுத்துதலே அவர்களின் நிச்சயதார்த்தமாகும். ஊரார் எல்லோரும் கலைந்து சென்ற பின்னர், ஒரு தோண்டு கழியினை எடுத்து மருமகனிடம் கொடுத்து தோட்டம் செய்யச் சொல்லி உத்தரவிடுவாள் மாமியார். மருமகனும் மிக்கத் தாழ்மையுடன் அதனைப் பெற்றுக்கொண்டு வேலையிலீடுபடுவான்.

தோட்ட வேலை மட்டுமல்ல. மாமியார் தன்னுடைய வேலைகளெல்லாவற்றையும் ஒன்றன் பின் ஒன்றாக அவன்மேல் சுமத்துவார். அவனும் எல்லாவற்றையும் திறமையாகச் செய்துமுடிக்க முயற்சிப்பான். ஆண் தன் உழைப்புத் திறமையினால் அங்கீகாரம் பெறுவதினூடேயே கணவன் என்னும் அந்தஸ்து பெற்று சமூகக் கணிப்பில் உயர்ந்து நிற்க முடியும்.

இந்த மாதிரியான ஒரு பரீட்சைக்காலம் பொதுவாக ஒரு வருடத்திற்கு நீடிக்கும். யூனிக்குடிகள் வழக்கத்தில் மருமகன் தோட்டக் கலையில் ஈடுபடுவது மட்டுமின்றி விறகொடிப்பது, தோல் பதனிடுவது, ஆடை நெய்து கொடுப்பது போன்ற தன் மாமியாரின் நானாவித வேலைகளையும் சிரமேற்கொண்டு செய்துகொடுக்கவேண்டும்.

மனிதகுல வரலாற்றில் முதன் முதலாக மனைவியுடன் வந்து தங்கும் கணவன், அவள் உறவினர்களுக்கு வேலைக்காரனாக, முக்கியமாக தோட்டக்காரனாகவே வெளிப்படுவதைக் காண்கிறோம்.

தன் மனைவியின் ஊரில் வேலைசெய்யும் இந்த ஒரு வருடமும் தினமும் ஒரு ஆண் அதற்குச் சென்று வந்தாலும் அவன் அங்கு ஒரு குவளை நீரும் குடிக்க அனுமதிக்கமாட்டான். உச்சி வெய்யிலில் களைக்க களைக்க வேலை செய்துவிட்டு அவன் தன் கிராமத்திற்கு ஓடிச் சென்றுதான் தாகசாந்தி கூடச் செய்ய முடியும். இவ்வகையாக தனக்கு வைக்கப்பட்ட பரீட்சையில் ஒருவாறு சித்திபெற்றவுடன் அவனுடைய கணவன் அந்தஸ்து நிரந்தரமாக்கப்படும்.

அதற்கு அவன் முன்னெப்போதும் செய்திராதவொன்றைப் பலர் முன்னிலையிலும் செய்வான்; ஆம். அவன் தன் மனைவியுடன் சேர்ந்து உண்பான். எமது நவீன யுகத்தில் திருமணத்திற்கு முன்



படிப்பகம்

உடலுறவு கொள்வது எவ்வளவு தகாததாக இருக்கின்றதோ அதே போல் பழங்குடி மக்களுக்கு திருமணத்திற்கு முன் ஆணும் பெண்ணும் சேர்ந்துண்பது அங்கீகரிக்கமுடியாதவொன்றாக இருக்கின்றது. இவ்வாறு கணவன் தோன்றிய காலகட்டத்தில் ஆண் பெண்ணிற்கு இடையிலான உணவுத் தடையும் தகர்க்கப்படும் நேரம் வந்து விட்டது.

மேலும், அக் கணவன் மனைவியின் ஊரில் உழைப்பது போக தன் சொந்த ஊரிலும் உழைத்து திருமணத்திற்கு வேண்டிய பரிசுப் பொருட்களையும் உணவினையும் சேர்க்கவேண்டியவனானான். திருமண காலத்தில் அவன் உறவினர்கள் அணிகலன்களையும் பலவித பரிசுப் பொருட்களையும் எடுத்துச் சென்று மணப் பெண்ணின் தாய்க்குக் கொடுப்பார்கள். அவள் அவற்றைத் தன் ஊராருடன் பகிர்ந்து கொள்வாள். பின்பு தன் உறவினருடன், கூடை நிறைய காய்கறிகளும் வேறு தயார் செய்யப்படாத உணவுப் பதார்த்தங்களும் கொண்டு மணமகனின் கிராமத்திற்குச் செல்வாள். அங்கு அவற்றை எல்லோருக்கும் வினியோகித்துவிட்டு சில பெண்களை துணைக்கு அழைத்துக்கொண்டு அக் கிராமம் முழுவதையும் கூட்டித் துப்புரவாக்குவாள். பின்னர் தான் கொண்டுவந்த உணவுப் பதார்த்தங்களில் எஞ்சியவற்றை அங்கேயே சமைத்து மணமகனின் உறவினர்களுக்கும் கொடுத்து அதற்குப் பதிலாக சமைத்த உணவு சிறிதினை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு எல்லோருடனும் திரும்ப ஊர் வந்து சேர்வாள்.

இதற்கு அடுத்த நாள், மணமகனின் உறவினர்கள் அதே போன்று சமைககாத உணவுப் பதார்த்தங்களை எடுத்துச் சென்று மணமகளின் கிராமத்தில் வினியோகம் செய்துவிட்டு எஞ்சியவற்றை சமைத்துக் கொடுத்துவிட்டு சமைத்த உணவைப் பதிலுக்குப் பெற்றுக் கொண்டு ஊர் வந்து சேர்வர். ஒவ்வொரு சடங்கும் இரு பகுதியினருக்கும் பொதுவாக இருக்கும் வேளையில் கிராமத்தினைத் துப்புரவாக்கும் சடங்கு மட்டும் மணமகளின் உறவினர்களே செய்வதை அவதானிக்கலாம். ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே உணவுத் தடையை நீக்குமுன்பு ஆணுக்குச் செய்யப்படும் புனிதமாக்கப்படும் சடங்கே இது.

திருமணத்தன்று, மணமகளின் கிராமத்தில், அவளுடைய தாயார் தான் தயாரித்த உணவை மணமகனுக்கு ஊட்டுவாள். அதே போன்று மணமகனின் ஊரில் அவன் தாய் தன் உணவை மணமகளுக்கு ஊட்டுவாள். இந்த முக்கியமான சடங்குடன் திருமணச் சடங்குகள் முடிவுற்றதாகக் கருதப்படும்.

அநேக குடிகளில் ஆணும் பெண்ணும் சேர்ந்துண்பது திருமணச் சடங்குடன் முதலும் கடைசியுமாக செய்யப்படுகின்றது. அதற்குப் பின்பு அவர்கள் ஒருபோதும் சேர்ந்துண்பதில்லை. திருமணங்கள் வேரூன்றிய காலத்திற்குப் பின்பும் கூட ஆணும் பெண்ணும் சேர்ந் துண்ணும் வழக்கம் பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியிலேயே நடை முறைக்கு வரலாயிற்று.

யாக குழுவினர் மத்தியில் திருமண விருந்தின்போது கூட மண மகனும் மணமகளும் ஒன்றாக இருந்து உண்ணமாட்டார்கள். அவர் கள் ஒரு மூலையில் சுவரைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க அவர்களுடைய உறவினர்கள்தாம் தம்முள் உணவைப் பகிர்ந்து கொள்வர்.

இவ்வாறு, பகை மூளும் இரு கிராமத்தவர்களிடையே நட்பு நாடி திருமண உறவுகளை ஏற்படுத்தியவர்கள் பெண்களே. அவுஸ்திரே லியாவின் குயின்ஸ்லாந்தைச் சேர்ந்த பழங்குடிகளில் எப்பொழுதும் பெண்களே தமது விருப்பத்தை முதலில் தெரிவிப்பார்களாம். அதனை நிராகரிக்கக்கூடிய தகுதிகூட அந்த ஆண்களுக்கு இல்லை என்கின் றனர் ஆய்வாளர்கள். அவுஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த குர்னாய் குடிகள் மத்தியிலும் இதே வழக்கம் காணப்படு கின்றது. மெலனீசியா, நியூ இங்கிலாந்து, நியூசுலோப், நியூ அயர் லாந்து, பபுவா நியூகினி, ரொறஸ் ஸ்ட்ரேய்ட்ஸ் ஆகிய இடங்களிலும் பெண்களே தம் கணவர்களைத் தேர்ந்தெடுப்பர். ரொறஸ் ஸ்ட் ரேய்ட்ஸில் இளம் வாலிபர்களுடைய தொடக்கச் சடங்குகளில், பெண் களுடன் தாமே முதன் முதலில் மணங்கோரும் ஒழுக்கக்கேடான நடத்தைகளைப் பற்றிய பாடமும் புகட்டப்படுகின்றது. எகிப்திலும் கூட ஏட்டுச் சுவடிகளில் கண்டெடுக்கப்பட்ட காதல் கவிதைகளும் மடல்களும் பெண்களாலேயே வரையப்பட்டனவாகக் காணப்பட்டது. அக்காலத்துப் பெண்கள் ஆண்களிடம் காதல் வார்த்தை கூறி அவர் களுக்கு வலை வீசுவதைத் தமது உரிமையாகவே கொண்டிருந்தனர்.

### கணவன், மனைவி, சகோதரி

விவசாயத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களில் உபரி உற்பத்தி அதி கரிக்கத் தொடங்கியது. இதனால் உச்சக் கட்டத்தினை அடைந்து விட்ட கூட்டுக் குழுக்களின் வளர்ச்சி இந் நிலையினால் இடிபாடு அடையலாயிற்று தனியுடைமை ஒரு உரிமையாக வளர்ந்ததனால் ஒவ்வொரு கணங்களும் தமக்கென சில கிராமங்களை அமைக்கலா யின. சில சமயங்களில் ஒரு கணம் கூட பிளவுபட்டு வேறுவேறு கிராமங்களை அமைத்தது. இவ்வாறு மெல்ல மெல்ல அதிகநிலத்தை ஆக்கிரமிக்கும் வண்ணம் மரபுக் குழுக்கள் பரந்து செல்லலாயின.

www.padippakam.com

மரபுவழிக் கூட்டங்களுக்கிடையே இதுவரை நடந்து வந்த மண வினைகள் இப்போது தனியான இரு கணங்களுக்கிடையே ஏற் படுத்தப்படும் தொடர்புகளாகச் சுருங்க ஆரம்பித்தன. நாளா வட்டத்தில் கணங்கள் ஈடுபடாத வகையில் இரு கிராமங்களுக்கிடை யில்நடைபெறும் சம்பந்தப் பேச்சுகளாகி ஈற்றில் இரு குடும்பங்களுக்கு இடையில் நடக்கும் நிகழ்ச்சியாகி விட்டது. குழுக்களாக வாழ்ந்த வர்கள் தமக்கென ஒரு இடத்தை ஒதுக்கிக் கொண்டு குடும்பங்களாகப் பிரிந்தார்கள்.

இந்தக் குடும்பங்களில் கணவன் என்பவன் மனைவியுடன் வந்து குடியிருப்பவனாக மாறிவிட்டான். ஆயினும் இவை தாய்வழி உறவு முறைகளைப் பின்பற்றுபவையாகவே தொடர்ந்தன. ஒவ்வொரு குடும் பத்தில் தாயும் தாய்மாமனுமே முதலிடம் வகித்தனர். இங்கு கணவ னாக வாழ்ந்த ஆண்களுக்கு இது ஒரு இக்கட்டான சூழ்நிலையையே உருவாக்கிற்று. அவர்களுடைய நெருங்கிய உறவுகளும் பொறுப்பு களும் தமது சகோதரிகளுடனும் சகோதரிகள் பிள்ளைகளுடனும் இருக்க இங்கு வந்து மனைவியுடனும் அவள் உறவினர்களுடனும் வாழ்ந்தனர். ஆனால் கல்யாணம் போன்ற எந்த பொது சடங்குகளி லும் சகோதகர்கள், சகோதரிகள், சகோதரி பிள்ளைகள் என்றே குடும்பம் குடும்பமாய் முன்னின்று நடத்தினர். எங்கும் கணவன் மனைவி அவர்கள் பிள்ளைகள் அடங்கிய குழு ஒரு குடும்ப மாய் மதிக்கப்படவில்லை. இந்தக் கண்ணோட்டம் கணவன் மனைவிக் கிடையில் பெரும் பிரச்சினைகளைக் கிளப்பியது. மனைவியின் குடும் பத்தில் ஏதேனும் அழிவுகளோ இறப்புகளோ அல்லது வியாதிகளோ வந்தால் வேற்று மனிதனாகிய கணவனே அதற்கு மூலகர்த்தவாகச் சந்தேகிக்கப்பட்டான். இதனால் கணவனுக்கும் மனைவிக்குமிடை யில் சுமுகமான உறவிருக்கவில்லை. விவாகரத்துகள் மலிந்துபோய் காணப்பட்டன. பல சந்தர்ப்பங்களில் மனைவியின் சகோதரனின் விருப்பங்களைக் கணவன் பூர்த்தி செய்யவில்லை என்பது மட்டுமே திருமணங்கள் முறியப் போதுமான காரணமாகவிருந்தது.

ஒரு பெண் தன் கணவனுக்கெதிராக எப்போதும் தன் சகோதர னையே ஆதரித்திருந்ததனால் இது ஒரு தீராப் பிரச்சினையாயிற்று, கணவனை வீட்டை விட்டு வெளியேற்றும் படி மனைவியின் சகோ தரனே மனைவியிடம் உரிமையுடன் கூறிவிடுவான். இதற்கு மறு பக்கத்தில் மனைவியின் உறவு நிரத்தரமல்லாததாக இருந்ததனால் ஓர் ஆணும் தன் சகோதரியையே முற்றாக நம்பினான். மனைவி இறந்தாலோ அல்லது விவாரத்து ஏற்படும் பட்சத்திலோ கணவ னுக்கு அடைக்கலம் கொடுப்பது அவன் தாய் அல்லது சகோதரியி



படிப்பகம்

www.padippakam.com

னுடைய வீடல்லவா? மனைவியின் வீட்டின் மீதோ அல்லது அவள் பிள்ளைகள் மீதும் தானோ அவனுக்கு கடுகளவும் உரிமை இருக்க வில்லை. முன்வாசலில் மனைவியின் பிணம் வெளியேற பின்வாச லோடு கணவன் வெளியேதள்ளப்பட்டான். இச் சூழ்நிலைகளில் எவ் வளவுதான் அன்னியோன்யமாகக் கணவனும் மனைவியும் வாழ்ந்து விட்டாலும் அவர்கள் உறவு ஒரு எல்லையுடன் நிற்க வேண்டி யதாயிற்று.

சகோதரர்கள் சகோதரிகள் உறவிலும் இக்கால கட்டத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. ஒரு கணத்தின் சகோதரர்களெல்லாம் அங்கு உள்ள பெண்களின் நலன்களைக் கவனித்த அமைப்பு போய் தனி ஒரு குடும்பத்தில் ஒவ்வொரு சகோதரனும் ஒரு சகோதரிக்கு இணைக்கப்பட்டு அவளுடைய பிள்ளைகளின் நலனைக் கவனிப்ப வனானான். இதன் ஒரு விளைவாக, இரு கணங்களுக்கிடையே நிலவி வந்த பரிசுகள் பரிமாற்றம் இப்பொழுது சகோதரனுக்கும் சகோதரி யின் கணவனுக்குமிடையில் வலுக்கட்டாயமாக நிகழ்த்தப்படும் ஒரு கொடுக்கல் வாங்கல் போல ஆகிவிட்டது. அனேகமாக உணவு பதார்த்தங்களையே இவ்வாறு கொடுத்து வாங்கினார்கள்.

ஓர் ஆண் தன் நிலத்திலிருந்து வரும் விளைச்சலையெல்லாம் தன் சகோதரியின் கணவனுக்குக் கொடுத்துவிட்டு தன்னுடைய தேவைகளுக்கு மனைவியின் சகோதரனை நாடி நிற்க வேண்டியதா யிற்று. அறுவடை நாட்களில் சகோதரியின் வீடும் சேமிப்புக் கிடங் கும் எவ்வளவு தூரமாக இருந்தாலும் சரி, வேலையோடு வேலையாக விளைந்தவற்றை யெல்லாம் அங்கு கொண்டு செல்ல வேண்டியவனா கின்றான். ட்ரோபிரியான்டர்கள் மத்தியில் காணப்பட்ட இவ்வழக்கத் தைப் பற்றிய விவரணைகள் பின்வருமாறு:—

''அறுவடை காலத்தில் பாதைகளெல்லாம் கூடை நிறைய உண வுகளைச் சுமந்து கொண்டோ அல்லது வெறுங் கூடைகளுடனோ அங் குமிங்கும் செல்லும் ஆண்கள் கூட்டத்தினால் நிரம்பி வழியும். கிரி வின என்னும் இடத்தின் வடக்கிலிருந்து ஒரு கூட்டம் 12 மைல் ஓடி வந்து டிக்வாக்வா கரைக்கு வந்து ஓடங்களில் ஏறி ஆழமில்லாத ஏரி வழியே துடுப்பு வலித்து சினக்கேட்டாவில் இறங்கி இன்னும் பலகாத தூரம் நடந்தது. எல்லாம் எதற்காக? தன்னுடைய சகோதரியின் கணவனுக்குத் தன் விளைச்சலையெல்லாம் கொடுக்க மட்டும் தேவை யில்லையென்னில், தனக்குப் போதுமான அளவு விளைவிக்கக்கூடிய ஒரு மனிதனின் சேமிப்புக் கிடங்கை நிரப்புவதற்காக!''

எவ்வித பொருளாதார இலாபங்களுமற்ற இந்த ஏற்பாட்டினால் உழைப்பு விரயமாவதுடன் மைத்துனர்களுக்கிடையிலும் மனஸ்தா



படிப்பகம்

புங்கள் தோன்றலாயிற்று. இதற்கு மேலாக, ஒரு கணவன் இன்னும் மனைவிக்கும் அவள் உறவினர்களுக்கும் தன் உழைப்பினைக்கொடுக்க வேண்டியவனானான். இதனால் ஒரு வருடத்தில் மாறி மாறி இங்குமங்குமாய் தன் சகோதரியின் நிலத்திலும் தன் மனைவியின் நிலத்திலும் உழைத்தான்.

இவ்வாறு கணவனுக்கு ஏற்படக் கூடிய சில குறைகளைத் தவிர்க்கும் பொருட்டு மனைவியும் சில சமயங்களில் இடம் பெயர்ந்து கணவனுடைய கிராமத்திற்குப் போய்த் தங்கும் வழக்கம் படிப்படியாகத் தோன்றலாயிற்று. ஆயினும் ஒரு பெண்ணுக்கும் அவள் கணவனின் உறவினர்களுக்குமிடையே நிலவிய உறவுமுறை மேலோட்டமான சம்பிரதாய பூர்வ உறவாகவே கடைசி வரை இருக்க முடிந்தது. வடமத்திய ஆசியாக் கண்டத்தின் சகல இன மக்கள் மத்தியிலும் மனைவி ஒரு சிறிது காலமே கணவனின் வீட்டில் தங்கும் அதே வேளை மிகுதி நாட்களையும் கணவன் மனைவியுடன் அவள் வீட்டிலேயே கழிக்கின்றாள். டச்சு நியூகினிக் கணவன் தன் மனைவியை ஓரே வருடம்தான் தன் வீட்டில் வைத்திருக்க இயலும்; அதன்பின் அவளை அவளுடைய வீட்டிலேயே வந்து காண்பான்.

ஆபிரிக்காவின் பல பகுதிகளில் இது இருபக்கத்திற்கும் நியாயமானதோர் ஒழுங்காக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அங்கெல்லாம் ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் அவரவர் கிராமத்தில் ஒரு வீடும் வளவும் கொடுக்கப்பட்டது. வருடா வருடம் அவர்கள் தங்கள் குழந்தைகளுடன் மாறி மாறி ஒவ்வொரு வீட்டிலும் குடியிருப்பர். தமக்கிடையே அடிக்கடி மூண்ட சண்டைகளை தத்தம் கிராமங்களிலிருக்கும்போது தத்தமக்குச் சாதகமாகத் தீர்த்துக் கொண்டனர். வழக்கமாக இத்தகைய மனுக்களெல்லாம் தாய்மாமனிடமே எடுத்துச் செல்லப்பட்டது. அவரும் ஒரு தயக்கமில்லாது தன் மருமகனையோ மருமகளையோ அவமதித்ததாகக் கருதப்படும்மற்றப் பகுதியைப் பகிரங்கமாக வசைபாடி விட்டு ஊரை விட்டுவிரட்டி அனுப்பிவிடுவார். அவ்வாறு மானபங்கப்படுத்தப்படும் அங்கத்தினர் தம்முடைய சொந்தக் கிராமத்தில் இதற்கெல்லாம் வஞ்சம் தீர்த்துக் கொள்வார்கள். இப்படி ஏற்படும் பிரிவுகள் போதாதென பேறுகாலம் வந்து விட்டால் அதைச் சாக்காக வைத்தே மனைவி மாதக்கணக்கில் கணவனைப் பிரிந்து தன் வீட்டுக்கு வந்து விடுவாள். ஆபிரிக்காவின் பக்கரெவே மக்கள் மத்தியில் வாழ்ந்த ஒரு ஐரோப்பிய மத போதகரின் புகார்கள் இவை:—

''இங்கு திருமணங்களில் நல்ல புரிந்துணர்வும் ஸ்திரப்படுத்தும் தன்மையும் ஏற்படுவதற்குத் தடையாக நிற்பது சின்ன காரணங்

www.padippakam.com

களுக்கும் தம் வீட்டுக்குச் சென்றுவிடும் இப் பெண்களின் வழக்கமே. அவளுக்கு உடல்நிலை சரியில்லையென்றால் ''நான் வீட்டுக்குப் போகின்றேன்'' என்பாள். அவளுடைய உறவினர் ஏதும் விழா கொண்டாடுகின்றனரெனில் ''நான் வீட்டுக்குப் போகின்றேன்'' என் பாள். அவ்வாறு வீட்டுக்குச் செல்லும் நேரங்களிலும் அங்கே தங் கும் நாட்களை நீடித்துக் கொண்டே போவாள். இதனால் தனியே விடப்படும் கணவன் ஏமாற்றமடைந்தாலும் இவ்வழக்கத்தை மாற்ற வலுவில்லாதவனாகியிருக்கின்றான்.''

மனைவி கணவனுடன் வந்து வாழும் காலகட்டம் உருவான போதும் பிள்ளைகள் தாயினுடையதாகவே கணிக்கப்பட்டனர். விவாகரத்து ஏற்படும் பட்சத்தில் குழந்தைகள் தாயுடன் சென்று விடுவர். குழந்தைகளின் இறப்பின் போதும் அவர்களின் தாயும் பிள்ளைகளும் தாயுடைய உறவினருடன்தான் புதைக்கப்பட்டனர். கணவனோ தன் தாய்வழி உறவினருடன் புதைக்கப்பட்டான்.

ஒரு ஆணும் பெண்ணும் ஒன்றாய் வாழ்ந்து வாழ்க்கையின் இன்ப துன்பங்களைத் தமக்குள் பகிர்ந்து கொள்வது எவ்வளவுக்கெவ்வளவு இயற்கை நியதி என நாம் நினைக்கின்றோமோ அவ்வளவுக்கவ் வளவு அது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட ஒரு சம்பிரதாய மாக அன்றைய தாய்வழிச் சமூகங்களிலிருந்த மக்களுக்குத் தோற்றி யிருக்கின்றது. மரபுவழிக் கூட்டங்களுக்கிடையே இருந்த இப் பகைமை யுணர்ச்சி படிப்படியாக மறைய எதிரெதிர் கூட்டங்களிலிருந்த ஆண் களினதும் பெண்களினதும் தொடர்புகள் அதிகரிக்கப்பட்டதையும் நீடிக்கப்பட்டதையும் கண்டோம்.

சகோதரனும் சகோதரியும் முக்கிய அங்கத்தவராக நின்றுகொண் டிருக்கும் குடும்ப அமைப்பின் ஒரு மூலையில் கணவனாக நின்று கொண்டிருந்தவன் மெல்ல மெல்ல விசுவரூபம் எடுத்து சகோதரனை அப்புறப்படுத்தியது மட்டுமல்லாமல் தனது மனைவிக்கும் தலை வனாகி விட்டான். மேற்கூறிய ஒரு தனிக் குடும்பத்தின் வளர்ச்சி நிலையின் முக்கிய அம்சம் மணமக்கள் தமக்கெனவோர் உறைவிடத் தினை அமைத்துக் கொண்டதாகும். ஊருக்குள் வெவ்வேறு சமூகங் களைச் சேர்ந்த ஆண்களுக்கிடையே, அதாவது கணவனுக்கும் மனைவி யின் சகோதரனுக்கும், விளையக்கூடிய மனஸ்தாபங்களைக் குறைப் பதற்கு தனித்தனி வசிப்பிடங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். இது தனியுடைமைக்குச் சாதகமான, அதற்கு வழிவகுக்கும் ஒரு படிக்கல்லாக அமைந்துவிட்டது. மரபுவழிக் கூட்டங்களின் சடங்கு கள் சுருங்கி ஒரு குடும்பத்திற்கு மட்டும் ஏற்றதாக மாறியது. இத னாலேயே பசிபிக் தீவுகளைச் சேர்ந்த மலேகியூலா மக்களைப் பற்றி ஆய்வாளர்கள் கூறுகின்றனர் :



படிப்பகம்

"கிராமத்துக்குள் ஒவ்வொரு மணமுடித்த ஆணும் தனக்கென்று ஒரு உறைவிடத்தை ஏற்படுத்திக் கொண்டான். இவ்வுறைவிடங்களைச் சுற்றிக் கற்களாலும், அதன் மேல் பின்னிய நாணற் புதர்களாலும் ஆன வேலி கட்டப்பட்டிருந்தது... எந்த ஒரு ஆணும் அழைப்பின்றி இன்னொரு ஆணின் உறைவிடத்தினுள் நுழைய மாட்டான்: கிராமத்திலுள்ள சமூகத்தினரின் பரந்த மனப்பான்மையும் அதையொட்டிய பொதுவுடைமைவாத வாழ்க்கை நெறியும், ஒவ்வொரு ஆணும் தனது காணி நிலத்தைப் பற்றிக்கொண்ட ஆழமான பற்றுதலுடன் சமப்படுத்தப்பட்டதென்றே கூறலாம்.

இதனை ஆதிச் சமத்துவ வாழ் முறைக்கும் இன்றைய தனியுடைமை வாழ் முறைக்கும் இடையே காணப்படும் ஒரு மாறும் காலகட்ட நிலைக்கு சிறந்த உதாரணம் எனலாம். இம்முறையில் நுண்ணியதாக ஆனால் வெகு தீர்க்கமாக தாய்வழிச் சமூகங்கள் வேரறுக்கப்பட்டன. எந்தச் சமூக அமைப்பும் வரலாற்றின் யாதுமொரு கட்டத்தில் மனித குலத்தின் தேவைகளுக்கேற்பவும் அதன் பொருளாதார வளர்ச்சியுடன் பொருந்தத் தக்கவாறுமே உருவாகின்றது. அக் காலகட்டம் மாறுதலடைய சமூக அமைப்பும் பயனற்றதாகி அழிந்து விடுகின்றது. விலங்கியல்புகளையும் தன்னின உண்ணி முறைகளையும் தகர்க்கவே தாய்வழிச் சமூகங்கள் தோன்றின. இது நிறைவேற்றப்பட்டவுடன் மேற்கொண்டு ஏற்படும் வளர்ச்சிக்கு இவ்வமைப்பு இடையூறாகவே அமைந்துவிட்டது.

இரத்த உறவினருக்கும் இரத்த உறவினரல்லாதோருக்குமிடையே நிலவிய முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டிய காலகட்டம் உருவாகி விட்டது. இந்த முரண்பாடு தீர்க்கப்பட்ட வரலாறே தந்தை எனும் ஸ்தானத்தில் ஆண் என்பவன் அதிகாரத்தினைக் கையில் எடுத்ததன் வரலாறாகும். இதுவரை, கணவன் எனும் நிலையில் படிப்படியாக ஆண் தன்னை — ஸ்திரப்படுத்திக் கொண்டதும், தனியுடைமை மக்களிடம் வேரூன்றியதும் ஒரே சீராக ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாமல் நிகழ்ந்ததைக் கண்டோம். அதே போன்று பிந்திய கட்டத்தில், தந்தை எனும் ஸ்தானத்தில் ஆண் தனது அதிகாரத்தினை நிலைநாட்டியதும் வர்க்க வேறுபாடுள்ள சமூக அமைப்பு தோன்றியதும், முரண்பாடின்றி ஒரே சீராக வளர்ந்ததை நோக்குவோம்.

திட்டமாக வரையறுக்கப்பட்ட — வர்க்க வேறுபாடுகள் அடங்கிய சமுதாயம் தோன்றிய வரலாறே ஆண்கள் தந்தை ஸ்தானத்தில் தமக்கு அதிகாரத்தினைக் கைப்பற்றி எடுத்துக்கொண்டவரலாறாகும்.

www.padippakam.com

# ஆண் தாய்

அநாகரிக நிலையின் ஆரம்ப கட்டத்திலேயே குடும்பங்கள் தோன்றிவிட்டன. ஆனால் இந்தக் குடும்பங்கள் தாய் வழிக் குடும்பங்களாகவே இருந்தன. அப்போதெல்லாம் ஆண்கள் தந்தை என்னும் ஸ்தானத்திற் கூடாகத் தமது அதிகாரத்தினை நிலைநாட்டத் தொடங்கவில்லை.

மேலும் பெண் ஒருத்தி கருவுறுவதற்கும் கலவிக்கும் இடையில் இன்றியமையாத தொடர்பு இருப்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஒரு குழந்தையின் தோற்றத்தில் அதன் தந்தையின் பங்கு என்ன என்பது பற்றி அவர்களுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை.

ஆஸ்திரேலியா, நியூகினி, நியூகலடோனியா, ட்ரோபிரியண்ட் தீவுகள், மத்திய போர்னியோ போன்ற இடங்களில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் செய்யப்பட்ட ஆய்வுகள் அங்குள்ள ஆதிவாசிகள் குழந்தையின் பிறப்பினுடைய தன்மை பற்றி எதுவும் தெரியாத நிலையில் இருந்ததைக் குறிப்பிட்டுச் சொல்கின்றன.

ஒரு பெண் கருவுறுவது என்பது சில மந்திர சக்திகள் அப்பெண்ணின் உடலில் புகுவதால்தான் என்றோ அல்லது அப்பெண் சில உணவு வகைகளை உட்கொண்டதனால்தான் என்றோ அவர்கள் நம்பினர்.

ஒரு பெண் கர்ப்பமடைவதில் ஒரு ஆணின் பங்கை ஓரளவு ஊகிக்க முடிந்த இனங்களின் மத்தியில்கூட ஆணும் பெண்ணும் ஒன்றாக இருந்து உணவு உட்கொண்டதனாலேயே குழந்தை உண்டாவதாகவே கருதப்பட்டது.

அரபேஷ் மக்களைப் பற்றி மார்க்ரெட் மீட் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"தன் துணையினைக் கருவுறச் செய்யும் அந்த ஒரு நடவடிக்கையின் பின் ஒருவன் பிரிந்து எங்கேயும் சென்று விட்டு ஒன்பது மாதங்கள் கழித்துத் தன் குழந்தையைச் கொஞ்சுவதற்காக மனைவியைத் தேடி வரலாமென்பது அரபேஷ் மக்களுக்கு புரியாததொன்று. இது அருவருக்கத் தக்கதும் நடக்க முடியாத காரியமுமாக அவர்கள் கருதுகின்றனர். ஒரு கணநேர மோகத்தின் விளைவு அல்ல இது. கணவனும் மனைவியும் ஒன்றாக வாழ்வதால் பல நாட்களுக்கூடாக இருவரினாலும் கவனமாக வளர்க்கப்படுவதே குழந்தையாகத் தாயின் வயிற்றிலிருந்து உதிக்கின்றது என்று இவர்கள் திடமாக நம்புகின்றனர்."



படிப்பகம்

சகல இன மக்கள் மத்தியிலும் குடும்பங்கள் தோன்றிய காலகட்டத்தில் இத்தகைய அறியாமை காணப்பட்டது என்பதற்குப் பல சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆயினும் தந்தை என்பவன் சமூகத்தினால் உருவாக்கப்பட்டான். ஆரம்பத்தில் இவனை ''ஆண் தாய்'' என்றே குறிப்பிட்டனர்.

தந்தை உருவகத்தின் தோற்றத்திற்கு இரு காரணங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம். மனைவிக்கு உடலுறவுக்கான துணையாகி அவளுடன் நிரந்தரமாகக் குடிவந்து விட்ட கணவன், குழந்தை வளர்ப்பில் தன் மனைவிக்கு ஒத்தாசை புரிய வேண்டிய தேவை ஏற்பட்டது என்பதொன்று. அவ்வாறு ஒத்தாசை புரிந்தவன் தனக்கும் அவள் குழந்தைகளுக்குமிடையே ஒரு நிரந்தரமான உறவினை நாடியது.

மற்றையது குடும்பங்களாகி விட்டதன் பின் சமூகத்தின் மற்றைய பெண்களின் சேர்க்கையும் உதவியும் குறையவே மனைவியும் கணவனுடன் தனது வீட்டுப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தது கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் இவ்வாறு ஏற்பட்ட அர்த்தம் நிறைந்த உறவுதான் தந்தையை உருவாக்கியிருக்கவேண்டும்.

தன் மனைவியின் குழந்தைகளுக்கு தாய்மைக்குரிய கடமைகளைச் செய்வதற்கு ஒரு கணவன் சமூக அங்கீகாரம் பெறவேண்டியிருந்தது. ஏனெனில் தாய்வழி உறவு முறைப்படி அவன் இன்னும் வேற்று மனிதனே, கொலம்பஸும் அவர் சகாக்களும் கரிபியன் தீவுகளில் இறங்கிய போதே இச்சடங்கு முறை முதன் முறையாக அவதானிக்கப்பட்டது.

இச்சடங்கின்படி மனைவி குழந்தையைப் பிரசவித்தவுடன் அவள் கணவன் தானே அக் குழந்தையைப் பெற்றவனாக பாவனைசெய்து சில நாட்களுக்கு ஓய்வெடுப்பான். இந்தச் சந்தர்ப்பங்களில் குழந்தை பெற்ற பெண்களே வெகு சாதாரணமாக ஓடியாடித் தம் அன்றாட வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பர்; ஆனால் அவர்கள் கணவர்களோ நோயாளிகளோவென எண்ணும் வண்ணம் படுத்தபடுக்கையாய் இருப்பர். இந்நாட்களில் அக்கணவன் வேலை செய்யவோ மாமிசம் உண்ணவோ, வேட்டையாடுதல் போன்ற வன்முறை சம்பந்தப்பட்ட தொழில்களில் ஈடுபடவோ அனுமதிக்கப்படமாட்டான். ஆரம்ப நாட்களில் பூரண உண்ணாவிரதமும் அனுசரிப்பான். இது காய்கறி மசியல், கஞ்சி ஆகியவற்றுடன் படிப்படியாக முறிக்கப்படும். சமூகத்தின் வயது முதிர்ந்த பெண்களே இச் சடங்குகளை மேற்பார்வையிட்டு நடத்துவர்.

www.padippakam.com

இக்கரணங்களின் முடிவில் மனைவியின் கணவனுக்கும் அவள் குழந்தைகளுக்கும் ஒருபந்தம் ஏற்படுத்தப்பட்டதாகக் கொள்ளப்படும். இக்குறிப்பிட்ட பந்தம் ஏற்படும் முன்பு அந்தக் குழந்தைக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தால் அதற்கு கர்த்தாவாகக் கணவன் குற்றஞ்சாட்டப்படுவதைத் தடுக்கவே அவன் விரத காலத்தில் பூரண ஓய்வு கொண்டான். நாள் முழுவதும் ஒரு வேலையிலும் ஈடுபடாதிருந்தால் சூனியம் செய்யவோ இரத்த வஞ்சம் கொண்டு வரும் வன்முறை சம்பவங்களில் ஈடுபடுதலோ முடியாதல்லவா? இதனால் மனைவியின் உறவினர்களின் கண்ணில் அவன் நிரபராதியாகத் தீர்க்கப்படும் சாத்தியக்கூறு இருந்தது.

சொலமன் தீவுகளில் உள்ள புகா மக்களின் வழக்கப்படி மனைவியின் பேறு காலத்தில் ஒரு கணவன் பாரமான பொருட்களைத் தூக்கவோ கோடரி, சத்தி போன்ற கூரான கருவிகளைத் தொடவோ அனுமதிக்கப்பட மாட்டான். அப்படிச் செய்தால் குழந்தைக்கு காயமேற்பட்டு விடும் என நம்பப்பட்டது.

தென்னமெரிக்காவில், குழந்தை இறந்தால் அதன் தாயின் கணவன் பல்வேறு கரணங்களை ஆசாரத்துடன் பின்பற்றாததே காரணம் எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கரிபியன் தீவுகளில் பிள்ளைப் பேற்றின் பின் நீண்ட காலத்துக்கு குழந்தையின் தந்தை பெரிய மிருகங்களை வேட்டையாடுவதிலிருந்து தடை விதிக்கப்படுகிறான். சூடான் நாட்டிலும் மனைவி கருவுற்ற காலங்களிலும் குழந்தை பிறந்த பின் இரண்டு மாதங்களுக்கு கணவன் புல், மரம் வெட்டுதல் போன்ற வேலையிலும் ஈடுபட முடியாது.

இவ்வகையாக விரத காலம் முடிவுற்றதும் கணவன் தன் மனைவியின் குழந்தையின் சேவைக்கு தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டான். இந்த சடங்கினாலேயே மனைவியின் ஆண் குழந்தைக்கும் அவனுக்கும் ஒரு விசேஷ பந்தம் ஏற்படுத்துவதாக நம்பினர். இது மறைமுகமாக, இரு வேறு மரபு வழிக் கூட்டங்களைச் சேர்ந்த ஆண்களை இணைக்கும் வழி என்பது கண்கூடு.

ட்ரோபிரியான்டர் தந்தையைப் பற்றிப் பின்வருமாறு விவரிக்கின்றனர்.

"...அவன் தன் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சி கழுவிச் சுத்தப்படுத்துவான். தாய்ப் பாலுடன் அது உண்ணும் காய்கறி பசியலை அவனே ஊட்டுவான். அதனைத் தாலாட்டுவதும் மடியிலிடு



படிப்பகம்

வதும் தந்தையின் விசேஷ கடமைகளாகக் கருதப்படுகின்றன. குழந்தையின் மலத்தினையும் சலத்தினையும் அளைவதனாலேயே தந்தைக்கும் குழந்தைக்குமிடையே நெருங்கிய உறவுமுறை உண்டாகின்றது என்பர்.''

'இவ்வளவுக்கும், அது தன் குழந்தையாக இருக்கக்கூடும் என்பதனை அக்கணவன் அறிந்திருக்கவில்லை. தந்தைக்கும் பிள்ளைக்கும் எவ்வளவுதான் நெருங்கிய உறவுமுறை தோன்றினாலும் தந்தை 'வேற்றுமனிதன்' எனப் பொருள்படவே அழைக்கப்பட்டான். அவ்வாறாயின் அக்குழந்தைகட்கு 'சொந்தம் உள்ள' மனிதனாக கருதப்பட்டது யார்? அவன்தான் அவர்களுடைய தாய் மாமன்.

## தாய் மாமன்

தாய்வழிக் குடும்பங்களின் தலைவர்களாகத் தாய் மாமன்களே திகழ்ந்தனர். எந்த முக்கிய சடங்குகளிலும் தமது சகோதரிகளுடனும் அவர்கள் பிள்ளைகளுடனுமே சமூகம் தந்தனர். அவர்கள் பட்டம், பதவி, சொத்து, சுகம் அனைத்திற்கும் சகோதரியின் பிள்ளைகளே வாரிசுகளாயினர். தாம் தமது மனைவியருடன் குடும்பமாய் வாழ்ந்தாலும் தமது மருமக்களுக்கு கல்வி மற்றும் தொழிற் பயிற்சிகள் அளித்து அவர்கள் வருங்காலத்திற்கு வகை செய்தலும் அவர்களைத் திருத்தி நன்னெறிப்படுத்துவதும் தாய் மாமன்மாரின் கடமைகளாக இருந்தன.

தந்தையோ இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தான். தான் சீராட்டி வளர்த்த பிள்ளைகள்மேல் அவனுக்கு எந்தவித உரிமையும் இருக்கவில்லை. அவர்கள் தவறு செய்தாலும் குறைந்த பட்சம் அவர்களைத் தட்டிக் கேட்டுத் திருத்த அதிகாரமற்றவனாக இருந்தான். குழந்தைகளும் ஆரம்பத்தில் தந்தையுடன் மிக ஒட்டுதலாக வளர்ந்திருப்பினும் நாளா வட்டத்தில் தம் சொந்த உறவு முறைகளைத் தெரிந்து கொண்ட பின்னால் தந்தையிடமிருந்து சிறிது சிறிதாகத் தம்மை வேற்றுமைப்படுத்திக் கொண்டனர். அவர்களுக்கிடையில் உள்ளத்தால் மட்டுமின்றி உடலாலும் பிரிவு ஏற்பட்டது. ஒரு சிறுவன் ஏறக்குறைய பத்து வயதில் தன் கல்விப் பயிற்சியைத் தொடரும் நிமித்தம் தாய் மாமன் வீட்டுக்கு அனுப்பப் பட்டான். அதே போன்று பெண்களும் தமது தாயையும் பிற பெண் உறவினர்களையுமே தமக்கு பக்க பலமாக நாடினர். தாய் இறந்து விட்டால் தந்தைக்கும் பிள்ளைகளுக்குமிடையே உள்ள உறவு முற்றாகத் துண்டிக்கப்படும் வழக்கம் இன்னமும் தொடர்ந்தது.

www.padippakam.com

இவை போதாதென்று, மரபுவழிக் கூட்டங்களுக்கிடையே நடந்த துரோகங்கள் இப்போது குடும்பங்களுக்கிடையில் தீர்க்கப்படும் பழியாயிற்று. எத்தனை விரதங்களுக்கூடாகக் கணவன் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டாலும், அவன் மனைவியின் குழந்தை என்ன காரணத்தினாலும் இறந்து போனால் ஏதோவொருவகையில் பழி தீர்க்கப்பட்டான். அவன் மனைவியின் உறவினர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கணவனின் உடைமைகளைச் சூறையாடினர்; குலக் குழுக்களின் காலத்திற்போல் அவனை ஊரை விட்டுத் துரத்துவதோ கொல்வதோ இல்லை.

மாஓரி இனத்தவர்களில் ஒரு குழந்தை எந்தவொரு காரணத்தால் இறக்க நேர்ந்தாலும் ஏதும் விபத்தில் காயமுற்றாலும் அதன் தாயின் உறவினரெல்லோரும் கூடி அவள் கணவனைத் தாக்க வருவர். கணவனும், முறைப்பாடு எதுவுமின்றி இப்போரில் தன்னைப் பாதுகாக்கவேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுவான். இப்போரில் அவனுக்கு ஏற்படும் இரத்தம் வெளிப்படும் முதல் காயத்துடன் போர் நிறுத்தப்படும். ஆனால் உடனேயே அவன் வீட்டிலுள்ள உடைமைகள் அனைத்தையும் சூறையாடுவார்கள். ஈற்றில் அந்தக் கணவன் அளிக்கும் விருந்தில் பங்கேற்பதுடன் கூட்டம் கலைந்து செல்லும்.

நியூஸிலாந்திலும் இவ்வாறே திடீர் விபத்திற்குள்ளாகும் பிள்ளைகளின் தந்தையர் தமது சொந்த உடைமைகள், உழைப்பிற்கான கருவியுபகரணங்கள் யாவற்றையும் இழந்தனர். சில விடங்களில் கதாயுதத்தாலும் தாக்கப்பட்டனர். இச் சண்டைகளில் தலையில் பெருத்த காயமுண்டானால் அது இன்னும் விசேமாகக் கருதப்பட்டது.

இதே கணவர்கள், தம் சகோதரிகளுக்கு சகோதரர்களாய் நின்று அவர்கள் கணவர்களைப் பழி தீர்த்தனர். ஆயினும் தந்தையாய் தாய்மாமனாய் முரண்பாடுகள் உள்ள இரு வேறு நிலைகளில் நின்று வாழ்வது கடினமாகத்தான் இருந்தது. இதற்கோர் உதாரணமாக ட்ரோபிரியான்டர்களின் கிராமமொன்றில் நடந்த சம்பவத்தினைக் குறிப்பிடலாம்.

அக்கிராமத்தின் தலைவன் மனைவியுடனும் மகனுடனும் அங்கு வாழ்ந்து வந்தான். இந்தத் தலைவன், தன் சகோதரியின் மகன் என்றொருவன் இருந்தபோதிலும் தூக்கி வளர்த்த அன்பின் நிர்ப்பந்தத்தினால் தனது மகனுக்கு பல சலுகைகள் அளித்தான். இதனால் அவனுடைய மகனுக்கும் மருமகனுக்கும் பகை மூளலாயிற்று.



படிப்பகம்

ஒரு சந்தர்ப்பத்தில், மனுடைய சில நடவடிக்கைகளினால் அவன் மருமகன் அந் நாட்டின் காலனித்துவ சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டு சிறையில் தள்ளப்பட்டான். இதனால் வெகுண்டெழுந்த மருமகனின் தாய் வழி உறவினர்கள் ''நீ வேற்று மனிதனாக இருந்தும் உனக்கு உண்ண உணவும் இருக்க இடமும் எமது கிராமத்தில் தந்தோம். ஆனால் நீயோ எமது இனத்தைச் சேர்ந்த ஒருவனுக்கெதிராகவே நடந்து கொண்டாய். உடனே ஊரை விட்டுக் கிளம்பு'' என தலைவனின் மகனிடம் கூறி அவனை ஊரை விட்டே துரத்தி விட்டனர். அவனும் தன் சொந்தக் கிராமமான தன் தாயின் கிராமத்திற்குச் சென்று விட்டான். இவனுடைய தந்தை கிராமத்தலைவனாக இருந்தும் தன் உறவினர்களுக்கெதிராக ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனெனில் அவன் மனைவியின் மகன் அவர்களைப் பொறுத்தவரையில் வேற்று மனிதனே. இச் சம்பவம் நடந்து மூன்று நாட்களுக்கு தலைவன் குடிசையை விட்டு வெளியே வரவில்லை. கடைசியில அவன் வெளிப் பட்டபோது துயரத்தின் சுமையினால் பல வருடங்கள் முதுமை அடைந்தாற் போல தோற்றமளித்தானாம். அவனுடைய மனைவி இறந்தவருக்கு ஒப்பாரி வைப்பது போன்று ஓலமிட்டபடி இருந்தாள். இதன் பின்னர், அவள் உணவை வெறுத்ததனாலும் ஆறாத் துயரில் அமிழ்ந்ததனாலும ஒரு வருடத்திற்குள் இறந்து விட்டாள். இவ்வாறு இரண்டு வெவ்வேறு சமூக அமைபபுகளுக்கு விசுவாசம் காட்டியதனால் அவர்கள் குடும்பம் சீரகுலைந்தது.

மேற்கூறிய சமூக அமைப்பு ஒரு சுவராசியமான இடைநிலை அமைப்பாகும். மனைவி இடம் பெயர்ந்து கணவனுடன் வாழவேண்டிய 'தந்தை'க் குடும்பம் தோன்றிவிட்டது; ஆயினும் மகன் தாயுடையதாகவே கணிக்கப்படுகிறான். தந்தை தன் மகன் மீது அன்பு செலுத்தினாலும் தன் சகோதரி பிள்ளைகள் மீதே விசுவாசமாக இருக்கக் கோரப்படுகின்றான் இவ்வாறாக தன் பிடியினைத் தளர்த்த மறுத்த அமைப்பு மனிதகுல வரலாற்றின் ஆரம்பக் கட்டம்முதல் கைக் கொள்ளப்பட்ட இரத்த உறவு முறைகளடங்கிய சமூக அமைப் பாகும். இதனை தகர்க்க முற்பட்ட அமைப்போ புதிய பொருளாதார உறவுமுறைகளின் அடிப்படையில் எழுந்ததும் அதன் அனுகூலங்களைத் தன் சார்பில் கொண்டதுமான தந்தையுடைமைச் சமுதாயமாகும். இப்போராட்டம் ஒரு இரத்தக் களரியினூடாகவே தீர்க்கப்பட்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

## சிசுப் பலிகள்

காட்டுமிராண்டி யுகத்தின் சின்னமாக தன்னின உண்ணி வழக்கம் எவ்வாறு இருந்ததோ அதே போன்று அநாகரிக நிலையின்

சின்னமாக இரத்தப் பலி கொடுக்கும் வழக்கம் உருவாகிற்று. இரத்தப் பலி கொடுக்கப்பட்டதன் ஆதாரங்கள் வரலாற்றிலும் புராணங்களிலும் காணப்படுகின்றனவாயினும் இதன் காரணங்கள் பெரும்பாலும் மர்மமாகவே இருந்தன. பசுபிக் தீவுகளைச் சேர்ந்த மலேகியூலா மக்கள் மத்தியில் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திற் செய்த ஆய்வுகள், ஓரளவிற்கு அதனைப் பற்றிய உண்மைகளைக்வெளி கொணர்ந்தன. உலகின் ஏனைய பாகங்களில் மனிதர்களைப் பலி கொடுக்கும் வழக்கம் சிறிது காலத்திற்கு நீடித்து அதன் பின்னரே ஆடு மாடுகளைப் பலி கொடுக்கும் வழக்கமாய் மருவிய அதே வேளையில் மலேகியூலாவில் வெகு சீக்கிரமாகவே இந்த மாற்றம் நிகழ்ந்துவிட்டது. இந்த முக்கிய காரணத்தினால் அந்த மக்கள் மனதில் நரபலி கொடுக்கும் சடங்குகளின் காரண காரியங்களும் தன்மைகளும் இன்னும் ஆழமாக பதிந்திருந்தன.

இவர்கள் பலிகளுக்காக கொம்புள்ள காட்டுப்பன்றிகளை வளர்த்தெடுத்தார்கள். மனிதர்களுக்குப் பதிலாக பன்றிகளைத்தாம் இப்போது பலி கொடுப்பதாக அந்த மக்கள் ஆய்வாளர்களிடம் வாக்குமூலம் தந்தனர்.

ஒருவன் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்ததும் அக் குழந்தையை பலியிடுவதுதான் உண்மையான முறை. இப்பொழுது அக்குழந்தைக்குப் பதிலாக ஒரு பன்றி பலி கொடுக்கப்பட்டது. இவ்வழக்கத்தின் படி குழந்தையொன்று பிறந்ததும் பொய்ச் சண்டைகள், நடனங்கள் போன்றவை அரங்கேறும். உறவினர்கள் ஒருவருக்கொருவர் பரிசுகள் பரிவர்த்தனை செய்து கொள்வர். இவையெல்லாம் முடிவுற்றதும் சடங்குகள் ஆரம்பமாகும்.

இவற்றின் முதல் பகுதியில் ஒரு தொகைப் பன்றிகள் ''ஆண்கள் உருவாவதற்கா''கப் பலி கொடுக்கப்பட்டன. அடுத்த சடங்கில் அத்தொகையிலும் இரு மடங்கு பன்றிகள் ''தந்தை மகன் எனத் தொடர்ந்து வரும் பரம்பரைக்கா''கப் பலி கொடுக்கப்பட்டன. இவ்விரு சடங்குகளைத் தவிர, ''தன் மூத்த மகனுக்கு தான் தந்தையாவதற்கா''க அந்தக் கணவரினால் விசேஷ பலிகள் கொடுக்கப்பட்டன. இவ்வளவும் யாருக்குக் கொடுக்கப்பட்டன? அக்குழந்தையின் தாயின் சகோதரனுக்கும் அவன் பெயரால் அந்தக் கணம் முழுவதற்கும் என விளக்கப்பட்டது.

மமேகியூலா மொழியில் ' தந்தையினால் விசேஷ பலிகொடுக்கப்படும் பன்றிக்கு 'மூத்த மகன்' என்றே பெயரிடப்பட்டுள்ளது. ஆகவே முன்பு இப் பன்றிக்குப் பதிலாக மூத்த ஆண் குழந்தை தான் பலியிடப் பட்டிருக்கவேண்டுமென நாம் யூகிக்கலாம். பலி கொடுக்கப்

www.padippakam.com

படும் தாய்மாமன் உருவமும் பாதுகாக்கும் ஆவியாக தேவதையுருவில் சஞ்சரிப்பதாய் கட்டுக்கதைகளும்இயற்றப்பட்டு விட்டன. இந்தத்தாய் மாமன் மகனுக்குச் செய்த வஞ்சகத்திற்காக, தனது சகோதரி மகனைக் கொன்றுவிட்டு ''இன்று முதல் நான் தான் லெவ்-ஹெவ்-ஹெவ் எனும் ஆவி'' என்று கூறி வானத்துக்குச் சென்று விட்டானாம். இந்த நாள்தொட்டு இது வானிலிருந்து கொண்டு இரத்த பலி நைவேத்தியங்களைக் கோரும் பயங்கர பூதமாகி விட்டது.

ஒரு ஆய்வாளர் கூறுகின்றார்:—

''அந்த மனிதர்கள் தந்தை வழி உறவு முறைகளைக் கொண்டு வருவதன் மூலம் தாய் வழிச் சமூகத்திற்கு தாமிழைத்த துரோகத்தினை ஈடு செய்ய வேண்டியவர்களானார்கள். நானாவித பொருட்களும் இவ்வகையான பலிகளுக்குப் பயன்பட்டன; பன்றிகள், பாய்கள், கிழங்கு வகைகள் (நாளடைவில்) பணம் துணி எனப் பலவாகும். இது ஓர் அநாகரிக நிலை. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை இந்த நிலை தொடர்ந்தது''

ஒரு புறத்தில் தாயின் சகோதரனினால், தனக்கும் தன் சகோதரிக்கும் சகோதரி பிள்ளைகளுக்குமிடையே இருந்த இரத்த உறவினைத் துண்டிக்க முடியவில்லை. மறுபுறத்தில், தன்னின உண்ணி வழக்கமிருந்த காலத்திலிருந்து வேற்று மனிதனாய் தன்னோடு கொண்டு வந்த இரத்த வஞ்சத்தினைத் தந்தையினால் போக்க முடியவில்லை. விளைவு? மூத்த ஆண்பிள்ளையை தாய்மாமனுக்கு இலஞ்சமாகக் கொடுப்பதனால் இக்கடன் அடைக்கப்பட்டது. சில பிராந்தியங்களில் இப்பலி ''பிள்ளையைப் பாகம் பிரித்தல்'' எனவும் பொருத்தமாகவே அழைக்கப்படுகின்றது;

இதன் பின்னரே உலகில் பலவிதமான தேவதைகள், பூதங்கள் பற்றிய நம்பிக்கைகள் தோன்றின, தந்தையருக்கும் அன்னையரின் சகோதரர்களுக்கும் இடையே ஆரம்பிக்கப்பட்ட இவ் விவகாரமானது மனிதர்களுக்கும் மனிதர்களினால் உருவாக்கப்பட்ட தேவதைகளுக்குமிடையே நடத்தப்படும் கொடுக்கல் வாங்கல்களாக மாறியது. காட்டுமிராண்டி யுகத்தில் விலங்குகளையும் வேற்று மனிதர்களையும் உணவினாலும் பரிசுப் பொருட்களினாலும் சந்தோஷப்படுத்த முயன்ற மனிதர், அநாகரிக நிலையில் இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளின் ஆதரவை நாட முயன்றனர். இந்தச் சூழ்நிலையில்தான் மதங்கள் ஆரம்பித்தன. தனியுடைமை பரவலாக்கப்பட்டதனால் ஏற்பட்ட முரண்பாடுகளின் பலனாக மனிதர்கள் முன்னெப்போதும் கண்டிராதவகையில் போரும் அழிவுகளும் ஏற்பட்டன. இது



படிப்பகம்

www.padippakam.com

தேவதைகளாலேயே ஏற்படுகின்றனவெனக் கருதப்பட்டு பலிகளுக்கு மேல் பலிகளாய்க் கொடுத்து அவற்றைத் திருப்தி செய்ய முயன்றனர் முன்பு பிறந்த முதல் ஆண் குழந்தையுடன் முடிவுற்ற பலி, இப் போது ஆயிரமாயிரம் குழந்தைகளை வெட்டுவதாலும் எரிப்பதாலும் நிறைவேற்றப்பட்டது. வரலாற்றில் இதற்கான உதாரணங்கள் ஏராளம், ஏராளம்.

கார்த்தேஜ் நகர மக்கள் அகதொகிஸ்ஸினால் தோற்கடிக்கப் பட்டபோது பால தேவதையின் கோபத்தைத் தணித்தால் இப் போரின் அழிவைத் தவிர்க்க முடியும் என்று எண்ணி ஒரு பெரும் பலிக்கு ஏற்பாடு செய்தனர். உயர்ந்த குடும்பங்களிலிருந்து இருநூறு குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிள்ளைப் பேறடையாதவர் கள் ஏழைக் குடும்பங்களிலிருந்து குழந்தைகளை விலைக்கு வாங்கிப் பலிக்காகக் கொடுத்தனர். நாட்டுக்காகத் தம் குழந்தைகளைத் தியாகம் செய்ய வந்த பெற்றோரும் ஏராளம். இவ்வாறு மொத் தம் ஐநூறைத் தாண்டிவிட்டது. இப்பிள்ளைகளை தேவதையின் சிலையின் கைகளிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக ஒரு நெருப்புக் குழியினுள் உருட்டி விடுவதன் மூலம் பலி கொடுத்தனர்.

இக் கரணங்களின் போது குழந்தைகளின் அழுகுரலும் ஓலங் களும் கேட்காவண்ணம் தோற்கருவிகளும் பேரிகைகளும் முழங்கின. ஒவ்வொரு குழந்தையின் தாயும் இதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டப்பட்டாள். ஆயினும் ஒரு கண்ணீரையோ விம்மலையோ அத் தருணத்தில் அவள் வெளிக்காட்டினாளாயின் இப்பலியின் மூல மாகக் கிடைக்கக்கூடிய பேறுகளனைத்தையும் இழந்து விடுவாள் என நம்பப்பட்டது. ஐநூறு வருடங்களுக்கு முன்பு கூட மெக்ஸிகோவில் நடைபெற்ற யாகத்தில் சிறுவர்கள் பலி கொடுக்கப்பட்டபோது அவர்கள் சென்ற நிரையே இரண்டு மைல் நீளத்துக்கு இருந்தது என ஏடுகள் கூறுகின்றன. இதில் சுமார் 70,000 இருதயங்கள் அத் தேவதைக்கு நிவேதிக்கப்பட்டன! எவ்வளவு தான் பலி கொடுத் தாலும் உலகில் போர்களும் பஞ்சங்களும் மலிந்தவண்ணமேயிருந் தன. இந்த துர்தேவதைகளுக்குத்தான் வாயைத் திறந்து தெளிவாக 'போதும்' என்று கதற முடியவில்லை.

எப்பொழுது முதன்முறையாக குழந்தைகள் பலி கொடுக்கப்படத் தொடங்கினரோ அப்போதிருந்துதான் மனிதர்களிடம் 'பாவம்' என்னும் உணர்வு ஆரம்பமானது. கிரேக்க புராணங்களிலேயே முதன் முதல் பாவம் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. டயனீசஸ் என்னும் குழந்தையைப் பலி கொடுத்து பாகம் பிரித்த தனால் ஏற்பட்ட குற்ற உணர்வில் வாழ்ந்த டைட்டன்களின் வம்



படிப்பகம்

www.padippakam.com

சத்தினரே மனிதர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குற்றத்தினால் உலகம் பிளவுபட்டு அதனின்று உதித்த எல்லாவற்றிலுமே இப்பாவம் தொற்றிக்கொண்டதனால்தான் மனிதகுலம் அதற்குரிய தண்டனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது என விளக்கப் பட்டது. இக் கருத்து நாளடைவில் கிரேக்க தத்துவத்தில் சேர்க்கப் பட்டது. கிறிஸ்தவ சமயநெறி தழுவலுக்கும் இது ஆதாரமாகியது.

ஆயினும் இரத்தப்பலிகள் நாகரீக நிலையின் ஆரம்ப காலத்துடனேயே முடிவுற்றுவிட்டன. இந்தக் கட்டத்தில் பண்டமாற்று பெரிய அளவில் ஒரு வியாபாரமாகச் செய்யப்பட ஆரம்பிக்கப்பட்டது. இதனால் மனிதர்களின் உழைப்பும் கால்நடைகளும் இலாபத்தினை ஈட்டுவதால் மதிப்பில் உயர்ந்து நின்றன. பண்டமாற்று மிக எளிமையான முறையில் நடைபெற்றபோதும் கூட இப் பலிகளினால் தனிப்பட்ட மனிதர்களின் பொருளாதாரம் அவ்வளவு பாதிக்கப்படவில்லை. மனித உழைப்பும் கால்நடை விலங்குகளுமின்றி உபரி உற்பத்தி எதுவும் இல்லை என மனிதன் தெரிந்து கொண்ட பின்னர் எல்லாவித பலிகளும் முடிவுற்றன. அதுவும் பண்டமாற்றில் உபயோகிக்கப்படும் முக்கிய பண்டமாக வீட்டு விலங்குகள் மாறியவுடன் வானிலுள்ள தேவதைகளெல்லாம் அம்போவெனக் கைவிடப்பட்டன. முன்போல் அவற்றுக்கு மனிதர் பயப்படவில்லை.

இக்காலந்தொட்டு பொன்னோடும் பொருளோடும் கடவுள்கள் திருப்திப்பட வேண்டியதாயிற்று. ஓர் ஆண், தன் மனைவியின் மகனைத் தன் மகனாக்கும் சடங்கினைக் கூட சில வெள்ளி நாணயங்களுடன் நிறைவேற்றிக் கொண்டான். இவ்வழக்கம் பழைய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில், ஒரு தந்தை தன் மூத்த மகனை மீட்பதற்கு, கோயில் பூசாரிக்கு 5 ஷிகல் நாணயங்கள் அல்லது அதற்குச் சமனான பண்டங்கள் கொடுக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தாய்வழி குடும்பங்கள் பணத்தால் தந்தை வழி குடும்பங்களாக மீட்டார்கள். தனியுடைமையும், அதன் பலனாக பண்டமாற்றும் வியாபரமும் முற்றாக வேரூன்றாத சமூகங்களில் தான் அநாகரிக பெயர்ச்சி நிலை ஏராளமான பலிகளுடன் தொடர்ந்தது. இதற்குச் சிறந்த உதாரணம் தென் அமெரிக்காவின் அஸ்கா மற்றும் அஸ்ரெக் இந்தியர்கள் ஆவர்.

### பரிசம்

மரபுவழிக் கூட்டங்களுக்கிடையே திருமணங்கள் நிச்சயிக்கப்பட்டபோது இரு பகுதியையும் சேர்ந்த ஆண்கள் ஒருவருக்கொருவர் பரிசுகள் கொடுத்து வாங்கினர். தன் சகோதரி மகளுடன் வந்திருக்



படிப்பகம்

கப் போகும் வேற்று ஆடவனுடன் தனது உறவுகள் சுமுகமாக இருக்க வேண்டுமே என தய்மாமன் விரும்பிச் செய்வதே இதன் முக்கிய அம்சமாகும்.

கால்நடை வளர்ப்பு மக்கள் மத்தியில் பரவலாகியவுடன் ஆடு மாடுகளையே பரிசுகளாகக் கொடுத்தனர். ஆனால் ஆரம்பத்தில் இவை எந்தக் குடும்பத்திற்கும் சொந்தமாக நிலைக்கவில்லை. ஒவ்வொரு குடும்பத்தினரும் மாறி மாறி தமக்குள் இவற்றைக்கொடுத்து வாங்கிக் கொண்டனர். நாளாவட்டத்தில் உபரி உற்பத்தி பெருக பண்டமாற்று வியாபாரமாகியது.

இதனால் கால்நடைகளின் மதிப்பும் கணிசமான அளவில் உயர்ந்தது. இதன் பின்னர் இவற்றை ஒருவரும் பரிசுகளாகக் கொடுத்து வீணடிக்க விரும்பவில்லை. இவற்றை உரிமை கொண்டு சமூகத்தில் தமது அந்தஸ்தினையும் எதற்கும் பேரம் பேசக் கூடிய தகுதியையும் உயர்த்திக் கொள்ளவே முயன்றனர். இவ் வழக்கம் திருமணங்களுக்குள்ளும் நுழைந்தன. அதிக அளவு செல்வம் இருந்தவனையே மணமகனாக விரும்பினர்; மணமகனும் தன் உடைமைகளைக் கொண்டு பேரம் பேசிப் பெண்ணைக் கொண்டான்.

மணப் பெண்ணிற்கு ஆகக்கூடிய விலை கொடுத்து மனைவியாக்கும் வழக்கமே பரிசம் போடும் வழக்கமாகும். கால்நடைகள் தான் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு பெயர்ந்து செல்லக்கூடிய, மனிதர்களினால் உடைமையாகக் கொள்ளப்பட்ட முதல் செல்வங்களாகும். ஆகவே உலகில் கால்நடை வளர்ப்பு காணப்பட்ட பிராந்தியங்களிலேயே பரிசம் போடும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது. அவுஸ்திரேலியா, மெலனீசியா, பொலினீசியா, அமெரிக்கா போன்ற இடங்கள் கால்நடை வளர்ப்புப் பிரதேசங்களாக இல்லாததனால் இங்கு பரிசம் போடும் வழக்கம் ஒருபோதும் காணப்படவில்லை. மாறாக, ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களில் இது நன்கு வேரூன்றியிருந்தது. இதன் விளைவாக முன்பு இரு பகுதியினரின் தாய் மாமன்களுக்கிடையில் பரிவர்த்தனை செய்யப்பட்ட நல்லெண்ண நடவடிக்கைகள் இன்று இரு தனி மனிதர்களுக்கிடையில் பேசப்படும் பேரமாகப் போய்விட்டது.

தந்தைக் குடும்பங்களின் வரவால் தாய் மாமன்களும் தனியே பிரிந்து தத்தம் குடும்பங்களுக்குத் தந்தைகளாகி விட்டதனால் பெண்களுக்கு இருக்கக்கூடிய கடைசி ஆதரவாளர்களும் கழற்றப்பட்டு விட்டனர். ஒருபுறம் கணவனும் மறுபுறம் தந்தையுமாக, தாய்வழிச் சமூகத்தின் இரு 'வேற்று மனிதர்கள்' பெண்ணை வியாபாரச் சரக்காக மாற்றினர்.

www.padippakam.com

பரிசம் போடும் வழக்கத்தினால் தான் முழுவதுமாக சொந்தம் பாராட்டக்கூடிய தன் வாரிசுகளைக் கொள்ளும் உரிமையே ஆண் அடைந்த மிகப் பெரிய ஆதாரமாகும். தன் திருமணம் விவாகரத்தில் முடிவுற்ற போதிலும் தான் திருமணத்தின் போது கொடுத்த கால் நடைகள் திருப்பித் தரப்படாத பட்சத்தில் தன் பிள்ளைகள் மீது அவன் தொடர்ந்து உரிமை கோரக் கூடியதாகவிருந்தது. ஏனெனில் இவ்வாறான பண்டமாற்றின் மூலம்தானே அவனே தான் தந்தை என்ற ஸ்தானத்தை வாங்கியிருக்கிறான். அவ்வாறு கடனை அடைக்காது அவன் மனைவி வேறொருவனுடன் வாழப்போய்விடுவாளாயின் அதற்குப் பின்னால் அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் முதல் கணவனால் உரிமை பாராட்டப்பட்டனர்.

ஒரு பெண் குழந்தைப் பேறடையாத சந்தர்ப்பங்களில் அவளுடைய கணவன் அவளுக்குப் பதிலாக இன்னொரு பெண்ணை மனைவியாக்கும் உரிமையையும் பெற்றிருந்தான். இதனை அந்த முதல் மனைவியும் அவள் பெற்றோரும் பேரம் பேசி ஏற்பாடு செய்யவில்லையெனில் கணவன் தன் ஆடு மாடுகளைத் திரும்பப் பெறமுடியும். ஆனால் எடுத்த கால்நடைகளைத் திருப்பிக் கொடுப்பது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை. அவை அநேகமாக அப் பெண்ணின் சகோதரனுக்கு மனைவி எடுக்க பரிசமாகக் கொடுக்கப் பட்டிருக்கும்; அல்லது ஒன்றிரண்டு இறந்திருக்கும். வழக்கமாக இம் மாதிரி சந்தர்ப்பங்களில் பெற்றோர் அப்பெண்ணின் தங்கையை அவள் கணவனுக்கு மணமுடித்து விடுவதுண்டு.

இந்தச் சிக்கல்களினால் பொதுவாக, மனைவி கணவனுக்குத் தரவேண்டிய குழந்தைகளின் எண்ணிக்கை சில விதிமுறைகளாக விவாகரத்து வழக்குகளில் நிறைவேற்றப்பட்டன.

மத்திய ஆபிரிக்காவின் சில குடிகள் மத்தியில் ஒரு பெண் ஐந்து பிள்ளைகளைப் பெற்றுக் கொடுத்தால் தன் திருமணத்தை முறித்துக் கொண்டு தாய் வீட்டிற்குச் செல்லும் சுதந்திரம் அளிக்கப்பட்டாள்.

சொங்கே மக்கள் வழக்கில் ஒரு பெண் சுதந்திரம் பெற மூன்று பிள்ளைகளேபோதுமானது. ஆனால் மடகஸ்காரில் விவாகரத்துகளின் போது கால்நடைகளைத் திரும்பப் பெறுதலோ அல்லது ஒருத்திக்குப் பதிலாக வேறொத்தியை மணம் செய்து கொள்வதோ சமூகத்தில் அங்கீகாரம் பெறவில்லை.

இவையெல்லாவற்றிற்கும் பதிலாக ஒரு மனைவி இன்னொரு நிபந்தனைக்குக் கட்டுப்பட்டிருந்தாள். இன்னொருவன் அவளைத் திருமணம் செய்ய முன் வந்தால் அவர்களுக்குப் பிறக்கப் போகும் முதல்



படிப்பகம்

www.padippakam.com

மூன்று குழந்தைகளை அவள் தன் முதல் கணவனுக்குக் கொடுத்து விட வேண்டும். இவ்வாக்குறுதியின் பேரிலேயே இரண்டாது திரு மணத்திற்கு முதல் கணவன் தனது ஒப்புதலைத் தந்து அதை நிறை வேற்றியும் வைப்பான். ஆகவே உண்மையில் பரிசமென்பது ஒரு ஆணுக்கு வாரிசுகளைப் பெற்றுத்தரும் கூலியாகும்.

இப்படி திருமணம் வியாபாரமாகி விட்ட பின்னர் பெண்கள் தம் மனத்துக்குகந்த மணாளனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையினை சிறிது சிறிதாக இழக்கத் தொடங்கினர். அதுமட்டுமல்லாது விவாக ரத்தும் கடினமான விடயமாகி விட்டது. எந்தப் பெண்தான் பெற் றுச் சீராட்டிய பிள்ளைகளை வெறொருவனிடம் ஒப்படைத்துவிட்டு வெளிக் கிளம்ப மனம் ஒப்புவாள்?

இந்தக் காலகட்டத்தில் விவசாயம், பயிர்ச் செய்கை ஆகியவற் றில் ஆண்கள் ஈடுபட ஆரம்பித்து விட்டதனால் தாம் ஈட்டிய செல் வங்களை ஒரு புறம் மனைவியைக் கொள்வதற்காகப் பெண்ணின் தந்தையிடம் கொடுத்தனர்; மறுபுறம் தாம் இறக்கும்போது தமது ஆண் வாரிசுகளுக்கே கொடுத்தனர். இவ்வாறு சமூகத்தின் செல்வம் ஆண்களின் கையிலேயே செறிய ஆரம்பித்தது.

இங்குதான் ஆணாதிக்கம் வெளிப்பட ஆரம்பித்தது எனலாம். பெண்களோ தமக்கென்று சொத்து எதுவுமின்றி பெரும் விலங்கைத் தமக்கு மாட்டிக் கொண்டனர்.

ஆயினும் பரிசம் போடும் வழக்கத்தினல் ஒரு நன்மை விளைந் தது எனலாம். தந்தைக் குடும்பங்களின் வளர்ச்சியின் பெயர்ச்சி நிலையில் ஆண்களின் சொத்துகளுக்கு வாரிசுகளாகக் கருதப்பட்ட மூத்த பெண் குழந்தைகளை கொல்லும் வழக்கம் இருந்து வந்தது. பரிசம் வந்த பின்னர் பெண்களை வளர்ப்பது இலாபமாகக் கருதப் பட்டது.

ஆபிரிக்காவில் பொதுவாக ஒரு பெண்ணுக்கு 30 மாடுகளைக் கொடுத்து திருமணம் செய்தனர். ஹோமர் காலத்து கிரேக்கத்தில் ஒருவன் நூறு எருமைக்கடாக்களைக் கொடுத்து பெண் எடுத்தான். அது மட்டுமல்லாது பரிசம் பெற்றுக்கொண்ட தந்தை அதனைத் தன்னிஷ்டப்படி சுதந்திரமாக அனுபவிக்கவும் உரிமை பெற்றிருந் தான். இதிலிருந்து, ஒரு சந்தோஷமில்லாத திருமணத்திலிருந்து மீட்சி பெற நினைக்கும் பெண்ணுக்கு அவளது தந்தை எவ்வகை யான ஆதரவு கொடுத்திருப்பான் என்பதனையும் நாம் அனுமானிக்க இயலும்.



படிப்பகம்

www.padippakam.com

## தந்தை யார்?

தந்தைக்கும் பிள்ளைக்குமிடையே இருந்த இரத்த உறவுமுறை அறியப்படுமுன்னரே தந்தைக் குடும்பங்கள் தோன்றிவிட்டன. பன்று மக்கள் ''கால்நடைகள் பிள்ளைகளைத் தரும்'' எனக் குறிப்பிடுவார்கள். ஒரு பேரத்தினால் ஏற்பட்ட சமூக உறவே தந்தை பிள்ளை தொடர்பினை முதன் முதல் ஸ்தாபித்தது.

சில ஆய்வாளர்கள் குழந்தைக்கும் தனக்குமுள்ள இயற்கை பந்தத்தினை தந்தை அறிந்திருந்தும் சமூக உறவினையே அவன் முக்கியமாக மதித்ததனால் இப் பேரங்கள் ஏற்பட்டிருக்கலாமென கருத்து தெரிவித்தனர். எந்த வரலாற்றிலும், குழந்தையுடனான தன்னுடைய உண்மைத் தொடர்புகளை அறிந்த ஆண் குழந்தை ரீதியாகத் தன் உரிமைகளை விட்டுக் கொடுத்ததே கிடையாது. மாறாக, அவையெல்லாவற்றையும் பிரயோகித்து தன் மனைவியை இன்னும் கடுமையான விதிகளுக்குள்ளாகியதாகவே சான்றுகள் பகருகின்றன.

ஆண்களின் சகல உரிமைகளையும் விசுவரூபம் கொடுத்து எடுத்துக்காட்டிய மனுதர்ம சாத்திரத்தில் கூட ''ஒரு பசுவை உரிமை கொண்டவன் அதன் கன்றுக்கு எசமானனாவது போல ஒரு மனைவியை உரிமை கொண்டவன் அவள் பிள்ளைக்கும் எசமானாகின்றான்'' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே குழந்தைகள் தாயினூடாகவே தந்தையுடையதாக்கப்பட்டன.

அநாகரிக நிலையின் இடைக்கட்டத்தில் ஓர் ஆண் தன் சொத்தைக் கொடுக்கக்கூடிய வாரிசுகளைத் தேட ஆரம்பித்துவிட்டான். இதற்கு அவர்கள் கையாண்ட வழிமுறைகள் சுவாரசியமானவை. ஒரு பெண் தனது முதல் கணவனுடைய கடனை அடைக்காது வேறொருவனுடன் வாழ்ந்தால் அவளுக்குப் பிறக்கும் ஆண்கள் முதல் கணவனுக்கே வாரிசுகளானதை முன்பு நோக்கினோம். மேலும், ஒருவன் மனைவியிருந்தும் வாரிசுகளின்றி இறந்துவிட்டால் அவன் சகோதரன் முன்னவனுடைய சொத்துக்களுக்குப் பாதுகாவலன் என்ற முறையில் அவ் விதவையை மணம் செய்யத் தூண்டப்படுவான்.

இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் இறந்தவனுடையதாகவே கருதப்பட்டு அவனுக்கு வாரிசுகள் ஆயினர். அவ் விதவை சகோதரனுடன் வாழ விரும்பாது வேறொருவனைத் திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் இறந்தவனுடைய வாரிசுகளாகவே கருதப்பட்டன. சாவு நேர்ந்தால் கூட கணவன்



படிப்பகம்

மனைவிக்கிடையே இருக்கும் வியாபார ஒப்பந்தம் முடிவடைவதில்லை போலும்.

இன்னொரு வழக்கத்தில், இறந்தவனுடைய சகோதரன் வேறு எந்தப் பெண்ணுக்கும் கூலி கொடுத்து அவள் யார் மூலமோ பெற்றுத் தந்த பிள்ளையை இறந்தவனுடைய வாரிசாகக் கொள்ளலாம்.

ஆபிரிக்காவிலுள்ள நுவர் மக்கள் மத்தியில் ஓர் ஆண் மணமுடித்தாலும் முடிக்காவிட்டாலும் ஆண் சந்ததியின்றி இறந்து போவானாயின் அவனுடைய உறவினனொருவன் அவனுக்காகத் திருமணம் செய்து கொண்டு இறந்தவனுக்கு வாரிசுகளைப் பெற்றுக் கொடுப்பது வழக்கிலிருக்கின்றது. இவனும் தனக்கென இன்னொரு திருமணம் செய்ய வசதியற்றனவாய் இறந்து விட்டால் இன்னொரு உறவினன் இவனுக்காக வாரிசுகளைப் பெற்றுத்தர முன்வருவான். இப்படியே இது சங்கிலித் தொடராய் நீளும். இங்கு பாதித் திருமணங்களில் அவர்கள் பிள்ளைகள் பெற்றோருடையதாகக் கருதப்படுவதில்லை. யாரோ இறந்தவனுடையதாய் இருப்பர்.

பழைய ஏற்பாட்டிலும் தொன்மையான ஏட்டுச் சுவடிகளிலும் மலடிகளைப் பற்றி நிறையவே குறிப்பிடப்பட்டிருக்கிறன. அத்தனை பெண்கள் குழந்தைகளின்றித் தவித்தனராவென்றால், ஆண் குழந்தை இல்லாதவள் மலடியாகவே கருதப்பட்டாள் எனும் உண்மை வெளி வருகின்றது. தனியுடைமை எத்தனை அவஸ்தைகளை இந்த மனிதனுக்கு ஏற்படுத்தி விட்டது.

சில வேளைகளில் வாரிசின்றி இறந்துபோகும் ஆண் ஒருவனின் உறவுப் பெண் கூட இன்னொரு பெண்ணையணுகி அவளுக்கு தகுந்த சன்மானம் கொடுத்து அவளுடைய பிள்ளைகளை இறந்தவனுக்கு வாரிசாக்கலாம். மேற்காபிரிக்காவைச் சேர்ந்த டஹோமினியன்கள் மத்தியில் இது காணப்படுகின்றது. அங்கு வாரிசுகள் தராத பெண் தன் கணவனுக்கு வாரிசுகள் கிட்டும் வகையில் இன்னொரு பெண்ணுக்கு பொருட்களைக் கொடுப்பாள். அந்தப் பெண் யார் மூலமும் பெற்றுத் தரும் குழந்தைகள் முதற் பெண்ணின் கணவனது வாரிசுகளாகும். அவை அந்த முதற் பெண்ணையே 'அப்பா'வென விளிப்பார்கள். ஏனெனில் அவள்தானே அவர்களுக்குரிய கூலியைத் தந்தவள். தர்க்க ரீதியாக இதில் தவறேதும் காண முடியுமா?

இக்காரணங்களினால் தந்தைக் குடும்பங்கள் தோன்றிய காலகட்டத்திலும் பெண்களுக்கு கற்பு பற்றியோ, ஒரே ஆணுக்கு அதாவது தம் கணவனுக்கு மட்டும் விசுவாசமாக நடக்க வேண்டுமென்பது

பற்றியோ ஒழுக்க வரைமுறைகள் கற்பிக்கப்படவில்லை. இவை கடைசி மூவாயிரம் வருடங்களுக்குள்ளேயே ஏற்பட்ட மாற்றங்கள் ஆகும்.

அநாகரிக நிலையிலும், நாகரிக நிலையின் ஆரம்ப கட்டத்திலும் வாழ்ந்த மக்கள் மத்தியில் வேறு ஆண்களுடன் உறவு கொள்ளும்படி மனைவியரை அவர்களது கணவர்கள் தூண்டும் சந்தர்ப்பங்களே அதிகமெனக் கூறலாம். தம் நண்பர்களுடனும் மனைவியை பகிர்ந்து கொண்டனர். மேலும், ஒரு எதிரியை நண்பனாக்கவோ அல்லது போரினைத் தடுக்கவோ வேற்று மனிதருடன் உறவு ஸ்தாபித்துக் கொள்ள மனைவியின் தயவு வேண்டியிருந்தது.

இந்தக் காலத்து மக்கள் மொழியில் பிறர் மனை நயக்கும் குற்றத்திற்கு 'களவு' என்றே பெயரிடப்பட்டது. ஏனெனில் இன்னொருவனுடன் ஓடும் மனைவி தன் கணவனுக்குச் சேரவேண்டிய கால்நடைகளைத் திருப்பித் தராது அவற்றைக் 'களவாடி'ச் செல்கிறாள் என்பதே அவர்கள் கற்பித்த அர்த்தமாகும்.

நமது சங்க கால இலக்கியங்களில் கூட களவு என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காண்க. 'களவு' நடந்தால் கால்நடைகள்மற்றும் பண்டங்கள் பற்றி ஏராளமான பிரச்சினைகள் இரு தரப்பு ஆண்களுக்கும் ஏற்பட்டது. இரத்த வஞ்சத்தினைத் தீர்க்கும் தகராறுகள் ஆண்களுக்கிடையில் முடிவுற்றதும், முடிவுறாததுமாக சொத்துக்களைப் பற்றிய புதிய வகைத் தகராறுகள் அவர்களிடையே மூண்டுவிட்டன.

## விலங்கிடப்பட்ட பெண்

இவ்வாறு தமது நிலைமையின் கீழே தாழ்ந்து போய்க் கொண்டிருந்த பெண்கள், அடிமைகள் ஒரு வர்க்கமாகவே நிலைநிறுத்தப் பட்டபோது தாமும் முற்றாக விலங்கிடப்பட்டனர்.

சமூகத்தின் உற்பத்தி சார்ந்த உழைப்பிலிருந்தும் இல்லங்களில் செய்யக்கூடிய ஆக்கப்பூர்வமான பணிகளில் இருந்தும் அவர்கள் தள்ளி விலக்கி வைக்கப்பட்டனர். ஆண்கள் உறவு கொள்ளவும் அவர்களுக்கு வாரிசுகளைப் பெற்றுத் தரவும் அவர்களுக்கு தனிப்பட்ட சேவைகளைப் புரியவுமே பெண்கள் உரிமை கொள்ளப் பட்டனர்.

இதற்குப் பின் திருமண பேரங்கள் தலைகீழாக மாறின. பெண்களை மனைவியராய் எடுக்க சீதனம் மூலமாக ஆண்கள் ஊக்குவிக்

கப்படும் நிலை உருவாகிறது. கணவனுக்கு சேவை செய்வது தவிர பெண்ணுக்கு வேறு நோக்கம் எதுவும் இருக்கமுடியாது எனும் மனப் பாங்கு வேரூன்றியது. அதென்ஸ் நகர மக்களின் வாழ்க்கை முறை யில் சீதனத்தின் முதல் சுவடுகளைப் பார்க்கின்றோம். யூரிபிடிஸின் கிரேக்க நாடகத்தில் அவர்கள் கதாநாயகியான மெதியா இவ்வாறு குமுறுகின்றாள் :—

''அவெனியிலே வாழ்கின்ற அறிவுள்ள உயிர்களிலே
கடையெனக் கருதியது காரிகையர் தம்மினமோ
உயிருள்ள காலமெல்லாம் உனக்கேயுடைமையென்று
கணவன் என்றொருவனைக் கனபொருள் கொடுத்துக்
கொள்வாரே.''

இந்த நிலைமையின் பின் ஆண்களுக்குச் சாத்தியப்படாதது ஒன்றுமே இருக்கவில்லை. குழந்தைகள் கூட ஆணினாலாயே உருவாக்கப் படுகின்றன எனவும் சாதிக்கத் தொடங்கினர்! கிரேக்க நாகரிகத்தின் உச்சக்கட்டத்தில் வாழ்ந்த சிந்தனையாளர்கள் ஒரு தாயின் கருப்பை குழந்தை வளர்வதற்கான பொருத்தமான ஏதனமாக மட்டுமே இருக்கின்றதெனவும் குழந்தை பிறந்த பின் தாதியாகவே நின்று தாய் வளர்க்கின்றாள் எனவும் முடிவாக விளக்கினர்.

இந்தக் காலகட்டத்திற்கூட குழந்தை உருவாவதன் முழு விஞ் ஞானமும் மனிதர்களுக்குப் புரியவில்லை. இது தெரிய வருவதற்கு முன்னமேயே உரோமச் சட்டங்கள் ''அதிகாரம் யாவும் தந்தைக்கே'' என விதித்துவிட்டன. உரோம சாம்ராஜ்யத்தின் செனட் அங்கத் தினரும் சரித்திர ஆசிரியருமான கேட்டா உரோமச் சட்டங்களை விளக்குகையில் கூறினார் :—

''பெண்கள் தங்கள் தந்தையினதும் சகோதரர்களினதும் கணவர் களினதும் ஆதிக்கத்தில் இருக்கவேண்டுமென எனது மூதாதையர் உறு திப்படுத்தியிருக்கின்றனர். எங்களுடைய தந்தையர் பெண்களின் சுதந்திரத்தினைக் கட்டுக்குள் அடக்க ஏற்படுத்திய சட்ட திட்டங் கள் உங்கள் ஞாபகத்திலிருக்கட்டும் : இவற்றின் மூலமாகவே ஆண் களின் அதிகாரத்திற்குள் அவர்களை வளைக்க முடிந்தது. அவர்கள் என்று எமக்குச் சமமான நிலை எய்துகின்றனரோ அன்றே எம்மை ஆளத் தொடங்கி விடுவர்.''

www.padippakam.com

ஆண்கள் பெண்களைப் பற்றிய தமது நோக்கங்களை என்றும் மறைத்தது கிடையாது. இஸ்லாத்தின் வரவுக்கு முன்பு எழுதப் பட்ட ஓர் அரேபிய நூலில் கீழ் கண்டவாறு குறிப்பிடப்பட்டு இருக் கின்றது :—

''அண்ணன் புகழை
என்றுமே
தங்கை பேசாதிருப்பாளாக
தந்தை மாண்டாரென்று
மகள்
ஓலமிட வேண்டா
தம தெல்லைக்கப்பால்
வெகு
தூர தொலைவில்
கொத்தடிமை வாழ்வு
அவளின்று வாழ்ந்தால்
அத்தனையும்
அன்னவரே
அவளுக்கிஸ்ழத்த
இன்னல் காணீர்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பெண்களின் வரலாற்றில் திருமணங்களின் தோற்றம் ஒரு திருப்பு முனையாகும். மனிதகுலம் தாய்வழிச் சமூக மரபினின்று தந்தையுடைமைக் குடும்ப மரபிற்கு பிரிவுற்றுச் சென்ற சரித்திர நிகழ்வை நோக்கி அடியெடுத்து வைத்த முதற் கட்டமிது.

திருமணங்களின் தோற்றமும் தனியுடைமையும் ஒரே காலப் போக்கில் நடந்தன: ஒன்றையொன்று ஊக்குவித்தன; அதேபோன்றே, ஆணாதிக்கச் சமுதாயமும் வர்க்க முரண்பாடுகளடங்கிய ஒடுக்குமுறைச் சமூக அமைப்பும் ஒரே காலப் போக்கில் நடந்தன; ஒன்றையொன்று ஊக்குவித்தன.

இத்தோற்றப்பாடுகள் இற்றைக்கு 8000 வருடங்களுக்கு முன்பு தொடங்கி அடுத்த 5000 வருடங்கள் வரை நீடித்தவையாகையால் இவற்றைப் பற்றிய பல ஐயப்பாடுகள் தீராமல் தொடர்வது இயல்பே. ஆயினும் சமகால உலகினை, குறிப்பாகப் பெண்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள இந்நூலில் கையாளப்பட்ட கருத்துக்கள் ஒரு தளத்தினை ஏற்படுத்தவேண்டும்.

புதிய புதிய வாதங்கள் மலர வேண்டும். அவை எம்மைப் புதிய ஆய்வுகளுக்கு இட்டுச் செல்லவேண்டும் இதன் பயனாகப் பெற்ற அறிவு பெண்கள் இயக்கங்களை வழி நடத்தும் புதிய யுக்திகளைத் தோற்றுவிக்க வேண்டும்.

— சாந்தி சச்சிதானந்தம்

பெண் கல்வி நிலைய வெளியீடு இல. 28
37, கின்ரோஸ் வீதி,
கொழும்பு-4.
இலங்கை

ரூ. 10/-

படிப்பகம்